
காயத்ரி சித்தரின்

# ஞானகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:

**இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்**

9வது மாடி,
''காப்புறுதி இல்லம்''
21, வெக்ஷோல் வீதி,
கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகுரு

❋

ஆசிரியர்:

காயத்ரீ சித்தர்

ஆர். கே. முருகேசு சுவாமிகள்

❋

ஸ்ரீ காயத்ரீ பீடம்

“ஸ்ரீ நகர்”

82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்

நுவரெலியா.

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காயத்ரி சித்தர்

ஆர். கே. முருகேசு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"எனது தெய்வீகத் தொண்டினை இம்மண்ணுலக வாழ் மக்களுக்கு ஆற்ற என்னை பிள்ளையாக ஈந்த என் அன்னை பிதாவுக்கு எனது முதல் வணக்கம் கூறி, ஆன்மீகத் துறையில் ஆழ்த்தி என்னை ஆட்கொண்டு வழிநடத்தும் ஸத்குருவின் திருவடிகளுக்கு பல கோடி வணக்கங்களை காணிக்கையாக்கி இந்த ஆன்மீக நூலை எழுதுகிறேன்"

"அது வேண்டும் இது வேண்டும்" என்று தேவைகள் பல நிறைவேருமலேயேதான் மனிதர்கள் முதல் உயிரினங்களெல்லாம் மண்ணுலகில் பரிணமம் அடைகின்றன. "இனி நாம் பெறவேண்டியது ஒன்றுமில்லை. அனைத்தையும் பெற்றுவிட்டேன்" என்று சொன்ன மனிதனுமில்லை, தேவனுமில்லை. எல்லோருக்கும் ஏதாவது ஒரு தேவை இருந்து கொண்டுதானிருக்கும். அதைப் பெற்று இன்பமுற ஆசைப்படுவது இயல்பு. ஆனல் ஆசைப்படுவதால் மட்டும் தேவைகள் பூர்த்தியாகிவிடா, அதைப் பெறுவதற்காகப் பெரும் முயற்சியும் செய்யப்படவேண்டும். "விடாமுயற்சியால் பெறக்கூடாதது ஒன்றுமில்லை" என்பது பலரின் கருத்து. ஆனல் இது ஒரு வகையில் சரியல்ல. விடாமுயற்சியைச் செய்தவர்கள் எல்லோருமே அதில் வெற்றியடைந்தார்களென்று சொல்ல முடியாது. வாழ்க்கை முழுவதும் முயன்றும், போராடியும் காரியம் வெற்றியடையாமலேயே கருத்தழிந்து போனவர் பலருளர். அப்படியானல் நிச்சயமாய் ஒரு காரியத்தில் வெற்றியடைய வழியே இல்லையா?

பல வருடங்கள் மழையே இல்லாமல் நிலத்தின் வெகு ஆழம் வரை காய்ந்துபோயிருக்கும் பூமியில் நிச்சயமாய் நீர் பெறுவேன் என்று சொல்லி ஒருவன் விடாமுயற்சியுடன் கிணறு தோண்டினுல் பலனடைவானு? தீய்ந்துபோன விதையை அறியாமல் நிலத்திலிட்டு நிச்சயமாய் கனிபெறுவேன் என்று நினைத்து, எருவும், நீரும் இட்டு முயல்வதால் பலன் காண்பானு? ஒரு காரியத்தை விடாமுயற்சியுடன் தொடங்கு முன் அக்காரியம் வெற்றியடைவதற்குத் தேவையான காலம், இடம் முதலான எல்லாம் இருக்கின்றனவா? வெற்றியடையும் நாள் வரை அதற்குத் தேவையான உழைப்பைச் செய்யத் தன்னில் போதிய பலம் இருக்கிறதா என்பதை அறிந்து முடிவு செய்த பின்னர்தான் அக்காரியத்தைத் தொடங்க வேண்டும். ஆசையும், முயற்சியும் மட்டுமிருந்தால் காரியவெற்றிக்குப் போதாது. தேவையான பண்பும் பக்குவமும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வறுமையில் இருக்கும் ஒருவன் திடீரென இலட்சாதிபதியாக வேண்டுமென ஆசைப்படலாம். பல வழிகளில் முயற்சியும் செய்யலாம். ஆனால் வெற்றியடைவானென்று சொல்லமுடியுமா? இலட்ச ரூபாய்களைப் பெறுவதற்கான பண்பு அவனில் இல்லாதவரை இம் முயற்சியில் அவன் வெற்றியடையவே மாட்டான் யாராவது அவனுக்கு இலட்ச ரூபாய்களைக் கொடுத்தாலும் அதை உபயோகித்து அவன் நன்மை பெறுவானென்று நம்பமுடியாது. அதிர்ச்சியால் இறந்து போனாலும் போகலாம். குதிரைப் பந்தயங்களில் போட்டிகளில் எதிர்பாராத செல்வம் பெற்றதன் பயனாக அதிர்ச்சியடைந்து இறந்து போனவர்கள் பலர்.

இதேபோல் பரம்பொருளின் அருளைப் பெற்று உய்யவேண்டும் என்று ஒருவன் விரும்பினால் அதற்காகப் பல முயற்சிகளைச் செய்தால் மட்டும் போதாது இறை வழிபாட்டைத் தொடங்கும்முன்பே அதில் வெற்றியடைவதற்கான பக்குவத்தைத் தன்னில் உண்டாக்கிக்கொள்ள வேண்டும். இதையறியாமல் பல்லாண்டுகள் விடாமுயற்சியுடன் தெய்வ வழிபாடுகள் செய்து பலன் காணாததால் ''கடவுள் இல்லை'' என்ற முடிவுக்கு வந்து கவலைப்பட்டவர்களும் பலருள்ளனர். பெரும்பாலானவர்கள் இப்படியே பக்குவத்தைப் பற்றியறியாமல் ஏதோ படித்த கேட்டவைகளினால் ஏற்பட்ட ஆசையால் பல வகையில் வழிபாடுகளில் முனைந்து, சிறிதும் பயன் காணாது மனஞ்சோர்ந்து போகின்றனர். ஆகையால் இறைவனது பேரருளை பெற்றுய்ய விரும்புகிறவர்கள் முதலில் அதற்கான முயற்சியில் ஈடுபடுமுன், தமக்குப் அதற்கான பக்குவ நிலை இருக்கின்றதாவென முதலில் தெரிந்து. இல்லாவிட்டால் அதை உண்டாக்கிக்கொள்ள முயல வேண்டும். அதன் பின்புதான் வழிபாடுகளில் இறங்க வேண்டும்.

ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியடைய எத்தகைய பக்குவநிலை வேண்டுமென்பதை அக்காரியங்களில் வெற்றியடைந்துள்ள நல்லோர்கள் வாயிலாகத்தான் கேட்டறிய வேண்டும். சங்கீதக் கலையில் வெற்றியடைய என்ன வேண்டுமென்பதைச் சித்திரக் கலைஞனிடன் கேட்டறிய முடியாது. சங்கீதக் கலைஞனிடமே கேட்டறிய வேண்டும். இதேபோல் இறையருளைப் பெற எத்தகைய பக்குவம் வேண்டுமென்பதை இறையருள் பெற்றுய்ந்த மேலோர்களின் வாயிலாகத்தான் கேட்டறிய வேண்டும். அவ்வழியில் சிறந்த மேலோனாய் விளங்கிய மனித இனத்துக்கு அவ்வழிகளைக் காட்ட இறைவனே அவதாரமாக வந்ததாகக் கருதப்படும், ஸ்ரீ ஆதிசங்கரர் ''ஸாதன பஞ்சகம்'' என்ற நூலில் இறையருள் பெற்றுய்ய விரும்பும் ஒருவன் முதலில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை நன்றாக விளக்குகிறார். அவர் பாடிய ஐந்து சுலோகங்களின் கருத்தை, தமிழில் இப்புத்தகத்தில் உபதேச விளக்கமாக தருகிறோம். ஸ்ரீ ஆதிசங்கரர் போன்ற மகான்கள் விதித்துள்ள முறைகளின்படி ஒழுகுபவன் வெகு விரைவில் உறுதியாகப் பரம்பொருளின் பேரருளைப் பெற்றுய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து:- நல்லறிவால் நிற்க விரும்புபவர்களே! நான்தோறும் வேதங்களைப் படியுங்கள். அதில் சொன்னபடி கர்மங்களைச் செய்யுங்கள். அதைக் கொண்டு இறைவனை வழிபடுங்கள். பலனை நாடிக் கர்மங்களைச் செய்வதை விலக்குங்கள். பாவங்களை அகற்றுங்கள். உலக இன்பங்களை அனுபவிப்பதில் குற்றம் நேராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். எப்போதும் தன்னையறியும் முயற்சியைச் செய்யுங்கள் இல்லற பந்தத்திலிருந்து விரைவில் வெளிப் படுங்கள்.

வாக்கியப் பொருள்: வேதங்களைத் தினமும் படியுங்கள். இது எந்த நூலையும் குறிப்பதல்ல. அறிவு என்று பொருள். மனிதப் படைப்பின் முதலில் பிரபஞ்ச இரகசியங்களையும், உயிரினங்களின் வாழ்க்கை முறைகளையும், படைத்த இறைவனே சொல்லியிருக்க வேண்டும். 'கடவுள் பேசினார்'' என்பவை போன்ற இக்கருத்தை விளக்கும் வாக்கியங்கள் எல்லா மதங்களிலும் காணப்படுகின்றன. அவ்விறைவன் சொல்லிய நல்லுரைகளைக் கேட்கப் பெற்ற ரிஷிகள் அவற்றை பிற்கால மக்களுக்காக மந்திர உருவில் சொல்லி வந்ததை வேதங்கள் என்கிறோம். வேதத்திலேதான் பிரபஞ்சத்தின், உயிரின், இறைவன் தத்துவங்களின் விளக்கங்கள் இருக்கின்றன. "நான்மறை நவிலும் இறைவன்'' எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. அப்பழமை வேதக் கருத்துக்களை பிற்காலத்தவர்கள் மக்களின் பரிணாம நிலைக்குத் தக உபநிடத, வேதாந்த, சித்தாந்த நூல்களாக தொகுத்தளித்தனர். ஆகவே வேதம் என்னும்போது வேதத்தை தழுவி எழுதப்பட்ட நூல்களையும் கொள்ளலாம். வேதவழி நூல்களில்தான் பிரபஞ்ச. இறைவன் உண்மைகள், உயிரினங்கள் பெற வேண்டிய பேறுகள். அதற்கான வழிகள் சொல்லப்பட்டிருப்பதால் இறைவனருளைப் பெற விரும்பும் யாரும் வேதங்களை, வேதவழி நூல்களைத் தினமும் படிக்கவேண்டும். நாள்தோறும் மனதில் அதன் கருத்துகள் புகப்பட்டால்தான் மனம் தானாக அதே கருத்துகளில் இயங்கத் தொடங்கும். சில நாட்களில் அதைப் படித்து மற்றைய நாட்களில் வேறு நூல்களை மட்டும் படித்து வந்தால் மனம் இறையெண்ணத்தில் இயங்காமல் போகும். இறையருள் பெற மன அடக்கம் முதன்மையானதாகையால் அதற்கு நாள்தோறும் தவறாமல் வேதாதி நூல்களைப் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

அதன்படி இறைவனை வழிபடுங்கள்: இறைவனின் வழிபாட்டைச் செய்யுங்கள். கடவுளை வழிபட்டுய்ய வேண்டுமென்று விரும்பும் பலர் பல தவறான நூல்களைப் படித்து அதன்படி வழிபாடு செய்ய முற்படுகிறார்கள். இப்படித்தான் செய்யவேண்டும் என்று தாமாகவே முடிவு செய்து அதன்படி வழிபடத் தொடங்குகிறார்கள் பலர். இத்தகையோர் பல்லாண்டுகளாக வழிபாடுகளில் ஈடுபட்டு தம் வாழ்க்கையில் இறையுதவி ஏற்பட்டிருப்பதாக உணரவே முடியாமல் "இறையே பொய்'' என்ற முடிவுக்கு வந்து வீழ்ச்சியுறுகிறார்கள். இவர்கள் வழிபாட்டைத் தொடங்கிய முறையே தவறு. எந்தவொரு கலையையும் கற்று நல்ல முறையில் உபயோகித்துப் பயன் பெற வேண்டுமானால் தானே சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைப் படித்தோ, தன் மனம் போனபடியாகவோ அதைச் செய்ய முற்படக் கூடாது.அதில் முன்பே தேர்ச்சி பெற்று அனுபவமுடைய ஒரு ஆசிரியரை அணுகி அவர் சொல்வழி நின்று செய்தால்தான் கலையாலாகும் நன்மையைப் பெற முடியும். இதேபோல் இறைவழிபாட்டையும் அதை முறைப்படி கற்றுத் தேர்ந்து அனுபவிக்கும் ஒருவரிடமிருந்து அறிந்தே செய்யவேண்டும். அப்போதுதான் அதில் நாளுக்கு நாள் பயன் காண முடியும்.

அதில் சொன்னபடி காரியங்களைச் செய்யுங்கள்; உடல், வாக்கு, மனங்களால் செய்யப்படும் காரியங்கள் இக்காரியங்களின் பலனைகவே நன்மை, தீமைகளை அனுபவிக்கப் பிறப்புகள் பல உண்டாகின்றன. நல்ல காரியங்களைச் செய்தாலும் பிறக்க வேண்டும். நல்ல காரியங்களைச் செய்தால் எடுக்கும் பிறவியில் நன்மைகளை அனுபவிக்கவும் தீய காரியங்கலாலெடுக்கும் பிறவியில் தீமைகளை அனுபவிக்கவும் நேரும். உயிரினங்கள் எந்தக் காரியத்தையும் செய்யாமலிருக்க முடியாது காரியம் எதைச் செய்தாலும் பிறவி தப்பாது. அப்படியானல் பிறவாப் பேரின்ப நிலையைப் பெறுவதுதான் எப்படி? இதற்கு ஒரு வழி இருக்கிறது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் பலனை எதிர்பாராமல் செய்தால், அதனுல் பிறவி வராது. / காம்ய கர்மங்களை விளக்குங்கள் / பலனை எதிர்பார்க்காமல் எப்படிக் காரியங்களைச் செய்ய முடியும்? என்ன காரியங்களைச் செய்வது? வேதங்களில் எந்தக் கர்மங்களைச் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கின்றதோ அந்தக் கர்மங்களைச் செய்தால் பலனை எதிர்பார்க்கத் தேவையில்லை. வேதங்களில் விதிக்கப்பட்டிருக்கும் காரியங்களைக் கடமையாகச் செய்து வந்தால் உலகில் இன்ப வாழ்வும் கிடைக்கும். அன்றி கர்மததாலாகும் பிறவியும் உண்டாகாது இதையே கீதையில் வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ''யோகந்த குரு கர்மாணி சங்கம் த்யக்த்வா'' யோகநிலையில் இருந்துகொண்டு தொடர்பில்லாத நிலையில் கர்மங்களைச் செய் அக்கர்மங்களின் பயனுக உனக்குப் பிறவி வராது. பிறவிப்பெரும் பிணியகலும் ''பிறவிக்குக் காரணம் கர்மங்களே, அக்காரணத்தைத் கர்மங்களைக் கொண்டே விளங்கவேண்டும். ஆனுல் அவை நல்லதை நாடிச் செய்யப்படும் பாபகாரியங்களாகவோ இருக்கக் கூடாது. இவ்விரண்டுக்கும் வேருன வேதங்களில் சொல்லியுள்ள கர்மங்களாகவே இருக்க வேண்டும். இத்தகைய கர்மங்களால் இகபர நன்மைகள் கிடைப்பதுமட்டுமன்றி பிறவிப்பிணியும் விலகிப் பேரின்பம் கிடைக்கும் அதாவது வேதங்களில் சொல்லியுள்ள முறைப்படி இறைவழிபாட்டைச் செய்யுங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. நாமே வேதங்களை வாங்கிப் படித்து, அறிந்து வழிபாட்டைக் தொடங்கலாமென்பதும் இதன் கருத்தல்ல. வேதங்களைச் சரியாக முறைப்படி அறிந்து அவ்வழி நின்று அனுபூதி பெற்ற பேரியோர்கள் வாயிலாகக் கேட்டறிந்து அம்முறையிலேயே இறைவழிபாட்டைச் செய்ய வேண்டுமென்பதே இதன் பொருளாகும். முறையின்றி செய்யப்படும் எதுவும் பயனளிக்காது. இறைவழிபாடும் அப்படியே. இவ்வாறு அனுபவிக்கும் இதை பெரியோர்கள் வாயிலாகக் கேட்டறிந்தே இறைவழிபாட்டை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாபக்கூட்டங்களை அழியுங்கள் :** ஒரு விதையிலிருந்து பல விதைகள் உண்டாவதுபோல் ஒரு பாபம் பல பாபங்களைச் செய்வதன் மூலம் உருவாகும். 'இல்லை' என்ற பொய்யை மெய்ப்பிக்க பல பொய்களைச் சொல்ல வேண்டும். திருடு என்ற ஒரு பாபத்தில் வெற்றியடைய இம்சை, கதவடைத்தல் முதலான பல பாப காரியங்களைச் செய்ய வேண்டும். பாப காரியங்களை எப்போதும் தனியாகச் செய்ய முடியாது பல பாபகளுடன்தான் செய்ய முடியும் அதனால்தான் பாபங்களை விலக்குங்கள் என்று சொல்லாமல் பாபக்கூட்டங்களை விலக்குங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**உலக இன்பங்களில் குற்றங்களை விலக்குங்கள்:** உலக சுகங்களில் குற்றம் நேராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ''நியாயமான முறையில் பணக்காரனாக முடியாது'' என இன்று பலர் அனுபவ நிலையிலிருந்து கூறுகிறார்கள். இவ்வுலகில் நியாயமான, நேர்மையான உழைப்பு முயற்சிகளால் ஓரளவு இன்பத்தைத்தான் பெற முடியும். தேவைக்கு அதிகமான இன்பங்கள் வேண்டுமானால் நேர்மையான முயற்சியால் கிடைக்கும் சிறிய இன்பத்தில் திருப்தி அடையாமல் பெரிய இன்பங்களை நாடி அநியாயங்கள் பலவற்றை செய்வதில் சிலர் ஈடுபடுகிறார்கள். இவ்வீடுபாட்டால் குற்றம் பெறும் மனதால் இறையருளைப் பெற முடியாது. இறையருளைப் பெற வேண்டுமானால் குற்றம் செய்ய வேண்டிய அளவுக்குப் போகாமல் நியாயமான உழைப்பில் கிடைக்கும் இன்பத்தில் திருப்தியடைந்து வாழவேண்டும். அப்போதுதான் மனம் கலங்காமல் இறை தியானத்தில் நிலைபடும்.

**ஆன்மாவை அறிய முயற்சி கொள்ளுங்கள்:** ஆத்மாவை அறியும் இச்சை மனிதர்களுக்குத் தங்கள் உடலைப் பற்றியும், வாழும் உலகப் பிரபஞ்சத்தைப் பற்றியும் பல விஷயங்கள் தெரியும். ஆனால் அவைகளைத் தெரிந்து கொள்ளும் ''நான்'' யார், எத்தகையவன்? என்பது மட்டும் தெரியாது ''உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை'' என்கிறது கைவல்ய நவநீதம் விட்டுப்போகும் போது உலகைப்பற்றி எவ்வளவு அறிந்தும் என்ன பயன்? ஒரு நாளைக்கு அவ்வறிவு போகத்தானே போகிறது? உடல் போகும் உற்றார் போய் விடுவர், உலகமே போய் விடும் ஆனால் 'நாம்' மட்டும் இருப்போம். நித்தியமாய் இருக்கும் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் தொடர்பற்றுப் போகும் மற்றவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதால் நமக்கு நிலையான இன்பம் கிடைக்குமா? அதனால் இறையருள் பெற்றுத் தன்னை உய்வித்துக் கொள்ள விரும்பும் யாரும் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ளவே இச்சிக்க வேண்டும் ''தன்னை அறிவதே தலைவனை அறிவது'' இறைவன் யாரெனத் தெரிந்து கொள்ள விரும்புபவன் தன்னை யாரெனத் தெரிந்து கொள்ள விரும்பவேண்டும். ''தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்'' அதனால் இறையருட் பேற்றை விரும்புபவர்கள் ஆத்ம விசாரணையில் தன்னை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும். கேள்வி விசாரணை, சாதனை இவைகளால் இவ்வறிவு தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வீட்டிலிருந்து விரைவில் வெளிப்படுங்கள்: வீட்டை விட்டு வெளியேறுங்கள். இறையருள் பெறவேண்டுமானால் வீட்டைத் துறந்து காட்டில் சென்று வாழவேண்டும் போலும் என்று யாரும் இதற்குப் பொருள் செய்துகொண்டு விடக்கூடாது. பிரம்ம ஞானத்தில் மேம்பட்டிருந்த மாபெரும் ரிஷி முனிவர்கள் வீடுகளில் மனைவி மக்களுடன் வசித்தேயிருந்தவர்கள். மாபெரும் தவஞானியான வசிஷ்டர் 101 புதல்வர்களுடனும், அருந்ததியாம் மனைவியுடனும் பர்ணசாலையில் தான் வசித்திருந்தார். பர்ணசாலைகள் அக்காலத்தில் சிறு வீடுகள். சீதையின் வளர்புத் தந்தையும் ரிஷி முனிவர்களால் புகழப்படும் அளவுக்கு ப்ரம்ம சாதனையில் ஞானம்பெற்றிருந்தவருமான ஜனகர் அரச மாளிகையில் வசித்திருந்தார். ஆகவே வீடு என்பது குடியிருக்கும் வீட்டை மட்டும் குறிப்பது அல்ல. வீட்டிலிருக்கும் மனைவி, மக்கள், சொத்து, உடமைகளைக் குறிக்கும். இவைகளை விட்டு விலகுங்கள் என்றால் விட்டு ஓடிப் போய் விடுங்கள் என்று பொருளல்ல. இவைகளில் அபிமானம், பற்றுக் கொள்ளாமல் இருங்கள் என்றுதான் பொருள். இப்படித்தான் ஞானிகள் அனைவரும் வாழ்ந்திருந்தார்கள். ப்ராரப்த கர்மம் முடிந்து முத்திப் பேறு பெற வேண்டுமானால் இல்லறத்தில் இருந்தபடியே இன்ப துன்பங்களில் பற்றில்லாமல் இருக்கவேண்டும். இவைகளுக்கஞ்சி ஓடுபவனின் கர்மம் முடிவுறாது. இதற்காக மறுபடி பிறக்க வேண்டியிருக்கும். அதனால் வீட்டை விட்டு விரைவில் வெளியேறுங்கள் என்றால் வீடு, வாசல், மனைவி, மக்கள் அனைத்து சுதந்திரங்களில் இருக்கும் ஆசைப் பற்றை விரைவில் விட்டு உள்ளத்தெளிவில் வெளிப்படுத்துங்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

உட்பொருள்:

இறைவனின் பேரருளைப் பெற்று அஞ்ஞான மாயை கர்ம பந்தங்களிலிருந்து விடுபட்டு முக்தியைப் பெற விரும்புபவர்கள் நாள்தோறும் வேதம் முதலான இறைஞானத்தைப் பற்றிக் கூறும் நன்னூல்களை வாசித்தும், அவைகளில் கூறியுள்ளபடி பற்றற்று கடமையாக மட்டும் உடல், வாக்கு, மனக் காரியங்களைச் செய்த படியும் அவைகளில் கூறியுள்ள வழிபாட்டு முறைகளை அனுபூதி பெற்றவர்கள் மூலம் அறிந்து முறையாகச் செய்தபடியும், இறைவன் தியானத்தால் சித்தத்தில் குடியிருக்கும் பாபங்களை அகற்றிய படியும் புதிதாய் பாபங்கள் சேராமலிருப்பதற்கு தங்கள் உலக வாழ்க்கை நிர்வாகத்துக்கான வியாபாரம் தொழில் முதலியவைகளில் குற்றம் செய்யத் தேவையில்லாத அளவு செல்வம் திரட்டி வாழ்வதில் திருப்தி அடைந்தபடியும், எப்போதும் தன்னை யாரெனத் தெரிந்து கொள்ளும் விசாரணையில், சாதனையில் ஈடுபட்டு வீடு, வாசல், மனைவி, மக்கள் முதலியவற்றில் மனதைப் பறி கொடுக்காமல் கட்டுப்படுத்திய படியும் வாழ்ந்து வர வேண்டும்.

ப்ரம்வித்யா விளக்கம்:

இறையருள் பெற்றுய்ய விரும்புபவன் இறைவனே சொன்னதற்கான வழிகளைப் பாரம்பரியமாய் போதித்து வரும் வேதவிற்பனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெற்று, பிரபஞ்ச உயிரினங்களின் பரிணாமத்தை இறைவன் பிரதிநிதிகளாய் இருந்து நடத்தி வரும் குரு பரம்பரையில் சேர்ந்த ஒருவரை அணுகி உபதேசம் பெற்று அவ்வழியில் நாள்தோறும் சாதனை புரிந்து வரவேண்டும். கண்ட நூல்களைப் படித்து கண்டவர்களின் வார்த்தைகளைக் கேட்டு மனம் போனபடி இறைசாதனையில் ஒடுபடக் கூடாது. உண்மை ஆசார்யனைக்கான எங்கும் தேடியலைய வேண்டியதில்லை. இறை சாதனையை அறிய வேண்டும் என்ற விருப்பம் வலுப்பட்டால் அத்தொடர்பு தானாகவே கிடைக்கும்.

உபதேச விளக்கம்:

இறையருள் பெற விரும்புபவர்கள் தாமாகவே பல நூல்களைப் படித்து பலர் சொல்லக் கேட்டு அதன்வழி உபாசனா, சாதனைகளில் ஈடுபடக்கூடாது. தகுந்த ஆசார்யர்களை அணுகி விளக்கங்களையும், சாதன முறைகளையும் கற்று அதன்படியே ஒழுக வேண்டும். இதற்காக வீடு, வாசல், தான் செய்யும் தொழில்களை விட்டு ஊர் ஊராக சுற்ற வேண்டியதில்லை. இல்லறத்திலிருந்தே நான்கு அறங்களையும் பரிபாலிக்கலாம். முறையாக அறிந்து செய்வதுதான் வேண்டற்பாலது.

II

**கருத்து;** **எப்போதும் நல்லோர்களின் கூட்டுறவையே கொள்ளுங்கள்; இறைவனிடம் உறுதியான பக்தி கொண்டிருங்கள், அமைதி முதலான நற்பண்புகளை உலகில் சம்பாதியுங்கள், கர்மங்களை உறுதிகொண்டு விலக்குங்கள், உண்மையை அனுபவமாக உணர்ந்த வித்வான்களை அணுகி, அவர்களின் பாதங்களைச் சேவித்து, அவர்களிடம் ப்ரமனின் ஓரெழுத்தைப் பற்றி விசாரித்தறிந்து, வேதங்களில் கூறும் மகா வாக்கியங்களைக் கேட்டறியுங்கள்.**

வாக்கியப் பொருள்:-

எப்போதும் நல்லவர்களின் உறவையே கொள்ளுங்கள்:

பிரபஞ்சத்திலுள்ள ஸ்தூல, சூட்சும, காரணப் பொருள்கள் யாவும் தம்மைச் சுற்றிலும் ஓர் வகை இயங்கும் காந்த மண்டலத்தைக் கொண்டுள்ளன. இப்பொருள் தம் காந்த மண்டலங்கள் ஒன்றோடொன்று தொடும்படி நெருங்கினால் இரண்டின் காந்தங்களும் ஒருவாறு ஒன்றிலொன்று பொருமையைப் பறிமாறிக் கொள்கின்றன. இதனால் இரு பொருள்களின் தன்மையும் மாறுபடுகின்றன. ஆனால் இவை எல்லாம் சூட்சுமத்தில் நடைபெறுவதால் ஸ்தூலப் பொறிகளுக்கு புலனாகாது. ஆனால் ஒரு பொருளின் சூட்சுமத்தில் நடைபெறும் மாறுதல்களைத் தும் பின் மெதுவாக ஸ்தூலத்திலும் மாறுதலைச் செய்வதாகும். இப்படி பொருள்களைத்தும் ஓர்வகை சூட்சும காந்த மண்டலத்தைக் கொண்டுள்ளன என்பதை அறிவதற்காக சில பரீட்சா முறைகளும் உள்ளன இது பற்றிய விபரங்களை மேலும் விளக்கமாக அறிய வேண்டுமானால் "சூட்சும காந்த விஞ்ஞானம்" என்ற தலைப்புக் கொண்டு 4 பாடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் படித்தறியலாம். நல்லோரைக் காண்பதுவும் நன்று. தீயோரைக் காண்பதுவும் தீது என்ற பழமொழிகள் இக்கருத்துக் கொண்டே தோன்றியவை ஒரு நல்லவன் ஒரு கெட்டவனை நெருங்கும் போது, கெட்டவனின் சூட்சும காந்தம் பலமாயிருந்துவிட்டால் அது நல்லவனின் சூட்சும காந்தத்தில் நுழைந்து நிலை பெறும். இப்படி நிலைபெறும் அக் கெட்டகாந்தம் மெதுவாய் அந்நல்லவனின் மனம், உடல் முதலியவற்றை கெடுத்துவிடும். அடிக்கடி இப்படி நல்லவன் கெட்டவனை நெருங்கிப் பழகினுல் கெட்ட காந்தத்தின் பயனுக நல்லவன் ஒரு நாளைக்கு உடல் மனம் இரண்டிலும் கெட்டவனுகவே மாறிவிடுவான் கெட்ட சூட்சும காந்தத்தையுடைய இடங்களில் வசிப்பதாலும் இத்தகைய மாறுதல்கள் ஏற்படும். மனிதனின் கண்கள், கைகள், கால்கள் இம்மூன்றும் சூட்சும காந்தத்தை பெரிய அளவில் வெளிப்படுத்தும் சாதனங்கள். இதனுல்தான் கெட்டவர்களைப் பார்ப்பதுவும் கெடுதலெனப்படுகிறது. கெட்டவனைப் பார்க்கும்போது நம் பார்வையின் சூட்சும கிரணங்கள் வழியே கெட்டவனின் காந்தக் கதிர்கள் நுழைந்து இறை நெறியில் செல்பவன் நாளுக்கு நாள் தன் ஸ்தூல, சூட்சும காரணங்களிலுள்ள கெடுதல்களையெல்லாம் சுற்றி பவித்திரப்படுத்தி வரவேண்டும். இத்தகையவன் அடிக்கடி தீயோர்களின் உறவைக் கொண்டிருந்தால் இது எப்படியிருப்பினும் மறந்து கூட தன்னில் தீய பிரபாவங்கள் புகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? தீயோர்கள் தீமைகளையே பேசுவர், புரிவர். இறைவழி மாணவருக்கு இது அடாது. நல்லவர்களை நெருங்கும்போது நம்மில் அவர்களின் நல்ல காந்தம் புகுந்து, நாளாவட்டத்தில் நம் உடல், மனங்களைத் தூய்மைப்படுத்துமாகையால் எப்போதும் நல்லவர்களின் உறவையே கொண்டிருக்கவேண்டும். நல்லவர்கள், நல்ல இடங்கள், நல்ல பொருள்கள் இவைகளின் உறவிலும் தொடர்பிலுமே இறைவழி நின்று நன்மையைப் பெற விரும்புபவன் இருக்க வேண்டும்.

இறைவனிடம் உறுதியான பக்தி கொண்டிருங்கள்:

பக்தி என்றுல் ஏதோ சில மலர்களைக் கொணர்ந்து விக்கிரகத்தின் பேரிலோ, படத்தின் பேரிலோ சில மந்திரங்களைச் சொன்னபடி போட்டு அர்ச்சித்து தேவையைப் பூர்த்தி செய்து தரும்படி வேண்டிக் கொள்ளுதல் என பெரும்பாலானவர்கள் நினைத்து அத்துடன் தம் பக்தியை முடித்து வருகிறுர்கள். சிவவாக்கியர் என்ற சித்தர் ''நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே சுத்தி வந்து மொன மொனென்று சொல்லும் மந்திரம் ஏதடா? எனக் கேட்கிறுர். இதனுல் இவரைச் சிலர் நாத்திகர் எனக் கூறுவர். இது உண்மையல்ல. இவர் பரமபக்தர். இவரின் மற்றைய பாடல்களில் உண்மையான பக்திமுறைகளைப்பற்றி நன்கு விளக்குகிறுர். மார்வம் என்பதோர் கோவிலை வைத்து அதில் மாதவனெனும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூ விடுவதுதான் உண்மைப் பக்தி. உள்ளத்தில் என்றும் இறைவனைக் குடியிருத்தி செய்தொழில் அனைத்தையும் அவன் ஆணைப்படி செய்து அவன் அருளுக்குப் பாத்திரமாகும் வழியில் ஒழுகுவதே உண்மைப்பக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் இறைவனை உறையப்பெறச் செய்யாமல் வெளிச்சடங்குகளாகச் செய்யப்படும் எதுவும் பக்தியல்ல. பலனுங் கிட்டாது. இராமகிருஷ்ணர் போன்ற பக்தர்களின் உள்ளங்களில் எப்போதும் இறைவன் குடியிருக்க வில்லையா? அடியார்கள், நாயன்மார்கள் கோவில் வழிபாடுகளுடன் உள்ள வழிபாட்டையும் கொண்டிருந்தனர். உள்ள வழிபாடின்றி வெளி வழிபாடுகள் மட்டும் செய்வது உறுதியற்ற பக்தி. ஏனெனில் அது சில நிமிடங்கள்தானே செய்யப்படுகிறது. உள்ளத்தில் இறைவனை இருத்திச் செய்யப்படும் பக்தி உறுதியான பக்தி. ஏனெனில் அதில் எப்போதுமே தனக்கும், இறைவனுக்கும் தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது. வேட பக்தியால் ஏதோ நாலுபேர் அறியச் செய்யப்படும் பக்தியால் என்ன செய்கிறோம் என்று தெரியாதபடி முறைதவறிச் செய்யப்படும் பக்தியால் பலன் கிடைக்காது பலன் பெறும் முறையில் பக்தி செய்யப்பட வேண்டுமானால் அது உறுதியான பக்தியாக, உள்ளத்தில் இறைவனை எப்போதும் இருத்தி வழிபடும் பக்தியாக இருக்க வேண்டும். ஆகையால் நீங்கள் இறைவனின் பக்தியை உறுதியாகக் கொள்ளுங்கள்.

**அமைதி முதலிய பண்புகளைச் சம்பாதியுங்கள்:-** சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிறத்தை ஆகிய பண்புகளை இறைமாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**சமம்** :- அமைதியும் கலக்கமும், சஞ்சலமும் மனதில் உண்டாகாமல் எதிலும் அமைதியாக இருத்தல் வேண்டும்.

**தமம்** :- அடக்கம், வெளியின்பங்களில் பற்றுதல் உண்டாகாதபடி மனதை அடக்கிப் பழக வேண்டும். மனம் போன போக்கில் விடக்கூடாது.

**விடல்** :- கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டும். விடாப்பிடியாய் வீணை ஐம்பத்துக்காக எதையும் பற்றியிருக்கக் கூடாது.

**சகித்தல்** :- நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு, மானம், அவமானம் போன்று எதுவரினும் பொறுத்துக் கொள்ள வேண்டும். எத்தனைத் துன்பங்கள் நேர்ந்தாலும் பொறுமையை இழந்து விடக்கூடாது.

**சமாதானம்** ;- வீண் சச்சரவுகளுக்கு இடந்தராமல் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் தன்னுடைய கருத்தைச் சரியென நிரூபிக்க முயலாமல் எல்லோருடனும் சமாதானமாகப் போக வேண்டும்.

**சிரத்தை** :- எக்காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் சிரத்தையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட வேண்டும். சிரத்தையுடன் செய்யப்படாத எக் காரியமும் பயன் அளிக்காது.

இந்த ஆறுவகைப் பண்புகளையும் மேற்கொண்டு ஒழுகுபவர்களுக் குத்தான் மனம் குவியும், கட்டுப்படும், தியானத்தில் நிலைபெறும். இப்பண்புகள் இல்லாதவனின் மனம் ஒரு நாளும் கட்டுக்கடங்காது. அதனால் இறைவழிபாடும் பயன்தராது. மனதைக்கட்டுப்படுத்தும் சாதனங்கள் இவை.

**கர்மங்களை உறுதி கொண்டு விலக்குங்கள்:-** தேவையில்லாத காரியங் கள் பலவற்றில் பலர் எப்பொழுதும் ஈடுபட்டிருப்பர். எதற்காக இதனைச் செய்கிறோம் என்று கூடத் தெரியாமலே பலர் பல காரியங் களை ஏன் செய்ய வேண்டும்? காரியங்கள் அனைத்தும் பயன் தருபவை ஆதலால் கூடுமானவரை குறைவாகவே காரியங்களைச் செய்ய வேண் டும். பயனற்ற காரியங்களில் ஈடுபடக்கூடாது. படிக்கப்பட்டபின் காரியங்களைச் செய்யாமலிருக்க முடியாது. எனவே அவற்றில் ஈடு படாமலிருக்க நல்ல உறுதி வேண்டும். அதைச் செய்யலாம், இதைச் செய்யலாம் என்ற ஆர்வம் எழும்போது உறுதியுடன் அதைத் தடுக்க வேண்டும். கர்மங்களை விலக்க வேண்டுமென்றால் எதையும் செய்யா மலிருப்பது என்பது பொருளல்ல. அது முடியாது, அப்படி இருக்கவும் கூடாது. பிராப்த கர்மம் தீர வேண்டுமானால் கர்மங்களைச் செய்தே யாக வேண்டும். அதனால் கர்மம் தீர்வதற்கான காரியங்களை மட்டும் செய்து கொண்டு கர்மம் சேர்வதற்கான காரியங்களை உறுதியுடன் செய்யாமலிருக்க வேண்டும் என்பது இங்கே சொல்லப்படுகிறது. இவ் வாறு இருந்தால் புதிய கர்மங்கள் சித்தத்தில் சேரா.

**உண்மையை அறிந்த வித்துவான்களை அணுகுங்கள்:-** சாதாரணமாக வித்துவான் என்பதற்குப் படித்தவன் என்றே பொருள் கொள்ளப் படுகிறது, ஆயினும் படித்தவர்கள் எல்லோரும் உண்மையை உணர்ந் தவர்கள் என்று சொல்ல முடியுமா? எழுத்து வாசனையே அறியாதிருந்த பலர் இறையருளைப் பெற்றிருக்கிறார்கள். படிப்பதும், அனுபவிப்பதும், வெவ்வேறு. பெரும்பாலும் கல்வியென் பது உலக விடயங்களை தெரிந்து கொள்வதற்கான சாதனமேயன்றி உண்மைத் தத்துவத்தை அனுபவிப்பதற்கான சாதனமல்ல. இறை மாணவர்களுக்கு வெறும் பட்டதாரிகளிடம் பெறவேண்டியது ஒன்று மில்லை. இவ்உண்மையை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர்கள்தான் இவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அதனால் உண்மையை உய்த் தறிந்த வித்துவான்களையே இறைமாணவர்கள் உபதேசத்திற்காகவும், ஐயம் தெளிவதற்காகவும் அணுகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவர்களின் பாதங்களைச் சேவியுங்கள்:-** ஒவ்வொரு மனிதனின் பாத வழியாகவும் அவனின் காந்தம் வெளிப்படுகிறதென முன்பு கண்டோம். உண்மையை அனுபவித்துக் கொண்டிருக்கும் வித்துவான்களின் பாதங்களிலிருந்து இறைதன்மை கொண்ட காந்தக் கிரணங்கள் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அவர்களின் பாதங்களில் நாம் சேவிக்கும்போதும், வணங்கும் போதும் அப்புனிதக் கிரணங்கள் நம் காந்தத்தின் வழி ஊடுருவி உட்புகுந்து நமது உடல், மனம் ஆகியவற்றைப் புனிதப்படுத்தி,பலமளித்து அவ்விதத்தன்மையை உண்டாக்கிறது. மகான்களின் காந்தச் கிரணங்களை மாணவர்கள் தம்மில் ஏற்பதையே தீட்சையென்று சொல்லப்படும். இக்காலத்தில் சில வேடங்களை அணிவது தீட்சையாகக் கொள்ளப்படுகிறது. இதிற் பயனில்லை அதனுல் மாணவர்கள் உண்மையனுபவப் பெரியோர்களை வணங்குவதன் மூலம் அவர்களின் புனித காந்தத்தால் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பிரம்மனின் ஓரெழுத்தை விசாரித்தறியுங்கள்:-** "ஏதத்யே வாஷரம் ப்ரஹ்ம" இந்த எழுத்தே பிரமத்தைக் குறிக்கும் என உபநிடதம் கூறுகிறது. குறியொன்றும் இல்லாதது இறை. ஆனுல் அதைக் குறிக்க நமக்கு ஓர் தன்மை வேண்டும். இதை எப்படி முடிப்பது? கறுப்பாயிருக்கும் ஒருவரின் நிறத்தைக் கொண்டு "கறுப்பரோ" என்று அழைப்பது போல் பிரம்மனின் இலட்சணங்களைப் பற்றி நாம் அதற்கு ஒரு பெயரிட்டு அழைக்கிறோம், அப்பெயர் ஓரெழுத்தாலான பிரணவம் **ஓம்** ஆகும். இவ் ஓரெழுத்து ஒரு பொருளின் விளக்கத்தில் பிரம்ம தத்துவங்கள் அடங்கியுள்ளன. அதைப்பற்றி யாரிடம் விசாரித்தறியலாம்? முன்பு சொன்னது போல் அதை அனுபவ பூர்வமாக அறிந்துள்ள வித்துவான்களிடம்தானே கேட்டறிய வேண்டும். அதனுலேயே பிரம்ம இலட்சணங்களை விளக்கும் பிரணவமாகிய ஓரெழுத்தின் தத்துவங்களை அனுபவ வித்துவான்களிடம் கேட்டறியுங்கள் என இங்கு சொல்லப்படுறது:

**வேதத்தின் மகா வாக்கியங்களைக் கேட்டறியுங்கள் :-** அஹம் ப்ரஹ்மாஸ்மி ஸோ அஹம் தத்துவமஸி என்பவை போன்ற சில வேத உபதேசக் கருத்துக்கள் அனைத்தையும் வேதம் தன்னுள் கொண்டுள்ளது. இவ்வாக்கியங்களின் கருத்தை அறிந்தால் வேத உபதேசம் முழுவதையும் அறிந்ததாகக் கொள்ளளாம். இவ் உபதேசங்களின் உண்மைகளை அனுபவ வித்துவான்கள் இடமேயே கேட்டறிய முடியும். நான் பிரம்மமாய் இருக்கிறேன். அதுவே நான்,அதுவே நீயாயிருக்கிறுய் என்பவை அம்மகா வாக்கியங்கள். இது எப்படிச் சரியென்பதைச் சுருக்கமாய் எழுதி விளக்க முடியாது. உண்மை வித்துவான்களைக் கேட்டுத்தான் அறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உட்பொருள்:-** இறைவன் பேரருளைப் பெற்றுய்ய விரும்புகிறவன் எப்பொழுதும் தன்னை நல்ல சூழ்நிலையில் இருத்திக் கொண்டு உள்ளத்தில் எப்பொழுதும் தன்னை நினைத்தபடி அமைதி முதலான சாதன ஒழுக்கங்களை மேற்கொண்டு மகான்களை அணுகி அவர்களால் தீட்சை பெற்று அவர்களின் வாயிலாக பிரம்ம வித்தையை அறிய வேண்டும்; அதன்படி நிற்க வேண்டும்.

**பிரம்ம வித்யா விளக்கம்:-** மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும் தானாக முத்திப்படிகளில் ஏறிப் போக முடியாது. அவனுடைய சாதரண அமைப்பில் அதற்கான ஆற்றல் இல்லை. இதற்குப் புதுவகையான ஆற்றல் தேவை அதை வேறெதனாலும் பெற முடியாது. நெருப்புக்குரிய சாதனங்களை நெருப்பைக் கொண்டே நெருப்பாக்க வேண்டியது போல் அவ்வாற்றலைப் பெற்றுள்ள மகான்களிடம் சேவை புரிந்து அவர்களிடமிருந்து ஆற்றலைப் பெறுவதே தீட்சையெனப்படும். இத்தீட்சையைப் பெறாத யாரும் பிரம்ம யாத்திரையின் மேற்படிகளை ஏறமுடியாது, சில படிகளின் பின் சோர்ந்து நிற்க வேண்டும். அல்லது கீழிறங்கி வரத்தான் வேண்டும். தீட்சை தரவல்ல குருமார்களைத் தேடியும் போகவேண்டியதில்லை. இச்சுலோகத்துக்கான அறுவகைச் சமாதி ஒழுக்கங்களைச் சரியாக மேற்கொண்டு ஒழுகுபவர்களைத் தேடி வந்து குருமார்கள் தீட்சை தருவார்கள் அல்லது அழைத்துத் தீட்சை தந்து அனுப்புவார்கள். தேடிக்கான முடியாத இவர்களுடைய தொடர்பு பக்குவமுடையோருக்குத்தானே கிடைக்கும்.

**உபதேச விளக்கம்:-** இறைவனருள் பெற உண்மை விருப்பமிருந்தால் அறுவகை நல்லொழுக்கங்களை மேற்கொண்டு அந்நிலைபட நன்பர் முதலிய சூழ்நிலைகளை உகந்ததாக மாற்றிக் கொண்டு இடைவிடாமல் மனதில் இறைவனைப் பற்றி நினைத்துப் பழகி வாருங்கள். பக்குவமானதுடன் மகான்களின் தொடர்போடு தீட்சையும் கிட்டும். பின் வேகமாய் முன்னேறிக் காரிய வெற்றியும் அடைவார்கள்.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து:- வேத மஹா வாக்கியங்களின் பொருளைச் சிந்தியுங்கள்; வேதங்களின் உயர்ந்த கருத்தை அடைக்கலம் பெறுங்கள்; கெட்ட தர்க்கங்களைச் செய்யாதீர்கள்; வேத சம்பந்தமான விடயங்களைத் தர்க்கியுங்கள்; ''நான் பிரம்மமாகவே இருக்கிறேன்'' என்று பாவியுங் கள் எப்போதும் கர்வம் கொள்ளாதீர்கள்; உடலைத் தான் எனக் கருதுவதை மறவுங்கள்; அறிவாளிகளிடம் தர்க்கம் செய்யாதீர்கள்.

வாக்கியப் பொருள்;- வேத மகா வாக்கியப் பொருளைச் சிந்தியுங்கள்:-

கேட்ட, படித்த ஓர் உண்மை வாழ்க்கையில் பயன்பட வேண்டுமானுல் அது சித்தத்திற் படிய வேண்டும். தெளிவடைந்த உண்மைகளே சித்தத்தில் படியும் தெருவில் நடக்கும் போது பலரைப் பார்க்கிறோம். பல வகைச் சத்தங்களைக் கேட்கிறோம்; வீட்டுக்கு வந்த பின் பார்த்த, கேட்ட அனைத்தையும் ஞாபகப்படுத்த முடியுமா? முடியாது. ஏனெனில் அவை சித்தத்திற் படியவில்லை. தெளிவடையாததால், அப்படிப் பார்த்தவைகளில் தெளிவின்மை காரணமாக எதையாவது ''இவன் பாலானவன்'' என்று தெளியப் பார்த்தும், ''இது நாயின் குரைப்பு'' எனத் தெளியக் கேட்டுமிருந்தால் அவை ஞாபகத்துக்கு வரும். ஏனெனில் தெளிவடைந்ததன் காரணமாக அவை சித்தத்தில் படிந்துள்ளன. பள்ளி மாணவர்கள் பலர் உபாத்தியாயர் சொல்வதைப் பல முறை கேட்டும் பல முறை புத்தகத்தில் படித்தும் பரீட்சையில் நினைவு படுத்த முடியாமல் திகைக்கின்றனர் காரணம் தெளிவுபடுத்திக் கொள்ளவில்லை என்பதாகும். கேட்டவுடன், படித்தவுடன் அவற்றைச் சிந்தித்து தெளிவுபடுத்திக் கொள்பவர்களுக்கே நினைவுபடுத்த முடியும் சிந்தனையில் தெளிவேற்படும் தெளிந்தவை சித்தத்திற் குடிபுகும், குடிபுகுந்ததை சமயம் நேரும்போது வெளிப் பட்டு வாழ்க்கைக்கு உதவும். இது ஒரு மனோதத்துவ சாத்திர உண்மை. வேத உபதேசம், நம் வாழ்க்கைக்கு பயன்படவில்லையானுல் அதைப் படிப்பதாலும், கேட்பதாலும் என்ன பயன்? அப்படி உபயோகப் பட வேண்டுமானுல் அது சித்தத்தில் படிய வேண்டும் சித்தத்தில் படிய வேண்டுமானுல் அது சிந்திக்கப்பட்டுத் தெளிவடையப் பெற வேண்டும். இங்கு சிந்தித்தல் என்பதன் பொருளையும் சற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும், கேட்ட விடயத்தை அப்படியே மனதில் நிறுத்தி பல முறை அதனை முன்பின்னுகக் கவனித்து, பின்னர் அதன் பகுதிகளின் தொடர்பு என்ன என்பதை ஆராய வேண்டும். இப்படி ஆராயுங்கள். ''இதுதான் அதன் தொடர்பு'' என்ற ஒரு முடிவு கிடைக்கும். இதுவே தெளிவு. இம்முடிவு மனத்தில் உதித்தால் உடனே அது சித்தத்தில் புகுந்து விடும். அங்கிருந்து நம் முயற்சி இல்லாமற்கூட நல்ல சமயத்தில் மனதில் வெளிபட்டு நமக்குதவும். ''பசு பால் கொடுக்கும் என்ற உண்மையை சிந்திப்பதென்ருல் இவ்வாக்கியத்தை மனதில் அப்படியே நிறுத்தி பசு, பால், கொடுக்கும் என்பவைகளைப் பலமுறை மனதிலேயே பார்த்து பின் பசுவுக்கும், பாலுக்கும், பாலுக்குக் கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலுக்கும் உள்ள தொடர்பை மானசீகமாக விசாரித்துக் கொண்டிருக்க இவ்வாக்கியத்தின் கருத்து மனதில் தெளிவுபடும். இது தானாகவே சித்தத்திற் குடிபுகுந்து விடும். வேறொரு சந்தர்ப்பத்தில் பசுவை பார்த்த உடனேயே முன்னறிந்த உண்மை மனதில் வெளியாகி நிற்கும். இந்த முறையில் வேத உபதேசங்களைப் படித்தறிந்தால்தான் அவை நம் வாழ்க்கையிற் பயன்தரும். அதனால் வேத மகாவாக்கியம் பற்றி முன்பாடத்தில் விளக்கப்பட்டுள்ள உண்மைகளைப் பயன்தரும் வண்ணம் தெளியச் சிந்தியுங்கள்.

**வேதங்களின் உயர்ந்தகருத்தில் அடைக்கலம் - சரன் புகுங்கள்:-** ஒரு துன்பம் வந்தபோது அதனை நமது சொந்த முயற்சியாலும், பொருள்களாலும் நாம் விலக்கிக் கொள்ள முடியாது என்று தெரியும்போது அதை விலக்குவதற்கான பொருளும் ஆற்றலும் உடைய ஒருவரை நாடிச் சென்று, நமது துன்பத்தை விலக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டி ஒப்படைக்கிறோம். இதுவே சரண்புகல் அல்லது அடைக்கலம் என்பதாகும். இனி, எப்படியும் நம் துன்பம் தீரும் என்ற நம்பிக்கையுடன், அதற்கான முயற்சிகளில் ஈடுபடாமல் நம்மால் சரண்புகப் பெற்றவர் செய்வதைப் போல் செய்து கொண்டிருக்க வேண்டியதுதான் நம் கடமை. பொறுப்பேற்றுக்கொண்ட அவர் தன் பொருளைக் கொண்டு தகுந்த வழிகளில் செயல் புரிந்து நம் துன்பத்தைப் போக்குவார். பிறவிப் பெரும் துன்பத்தை நாமாக விலக்கிக் கொள்ள முடியாது. உலக இன்பங்களைப் பெற்று வாழும் எந்த மனிதரையும் சரணடைந்து போக்கிக் கொள்ளவும் முடியாது. எல்லாக் கடன்களையும் விட்டு என்னையே சரணடை நான் எல்லாப் பாவங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன் எனக் கீதையில் கண்ணன் சொல்லியபடி பிறவிப் பிணியற இறைவனைத்தான் சரண் புக வேண்டும். அப்போது இறைவன் இப்படிச் செய், அப்படிச் செய்யாதே என நமக்கு உபதேசிப்பார். அந்த உபதேச வழியில் நிற்போமேயானால் நமது பிணியைப் போக்கியருளுவார் இறைவன். பிறவிப் பிணியை நீக்க விரும்புவர்கள், இன்னின்னவாறு ஒழுகவேண்டுமென வேதஞான வாயிலாக இறைவன் உபதேசித்திருக்கிறான். அதனால் நாம் அவ்வேத உபதேசங்களைச் சரணடைந்து விட்டால் - அப்படியே ஒழுகத் தொடங்கிவிட்டால் நம் பவப்பிணி, பிறவிப்பிணி ஒழிந்து உய்வோம். நம் இச்சைப்படி இப்படிச் செய்யவேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென நமது சிற்றறிவில் வந்தபடி ஒழுகுவதை விட்டு வேதோபதேசங்களைச் சரணடைந்து அதன் படியே ஒழுகினால் பிறவிப் பிணி அகலும். அதனால் வேதங்கள் விதித்தபடி ஒழுக்கத்தை மேற்கொள்ளுங்கள்.

**கெட்ட தர்க்கங்களைச் செய்யாதீர்கள்:-** உண்மையாகவே தனக்குத் தெரியாத ஒன்றைப் பற்றிப் பிறரிடம் கேட்க அவர் எதிரிடை சொல்லி வரும்போது அதில் எழும் ஐயங்களை மேலும் கேட்டுத் தெரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது நல்ல தர்க்கம். அவ்வாறன்றி எதிரியைக் கேள்விகள் கேட்டு விடை சொல்லமுடியாதபடி திணறச்செய்ய வேண்டுமென்று கேட்பது கெட்ட தர்க்கம் ஏட்டிக்குப் போட்டியாக விடைகளுக்குச் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்பது குதர்க்கம். கெட்ட தர்க்கங்களைச் செய்வதற்கு மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றியாக வேண்டும். மனதிற் தோன்றுவதைத்தானே வாயால் பேசுவோம். சன்மார்க்க சாதனையில் இருப்போரின் மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றக் கூடாதாகையால் அவர்கள் கெட்ட தர்க்கங்களில் எப்பொழுதும் ஈடுபடலாகாது.

**வேத சம்பந்தமான விடயங்களைத் தர்க்கியுங்கள்:-** தர்க்கத்தால் ஒரு பொருளைப் பற்றிய அறிவு வளர்ச்சியடையும். ஆனால் அது நல்ல தர்க்கமாய் உண்மையை அறியும் வேட்கையுடன் செய்யப்படுவதாய் இருக்கவேண்டும் பௌதீக விடயங்களைப் பற்றி நல்ல தர்க்கங்களைப் புரிவதன் மூலம் பௌதீக ஞானம் வளர்ச்சியடையும். ஆனால் இஞ் ஞானம் பௌதீக உலகுக்கு அப்பால் பயன்தராது. மேலும் மேலும் பௌதீகத்திலேயே பற்றுதலையுண்டாக்கி பல பிறவிகளை எடுக்க வழி கோலும். அதனால் இந்நெறியில் செல்பவர்கள் தங்களது தர்க்கத் தன்மையை பௌதீக விடயங்களுக்குப் பயன்படுத்தாமல் வேத சம்பந்த விடயங்களிலேயே பயன்படுத்த வேண்டும். இதனால் வேத உபதேசங்களைப் பற்றிய நல்ல ஞானம் வளர்ச்சியடைந்து, அவ்வழி நிற்பதற்கு பற்றுதல் அதிகமாகும். வேதங்கள் இறைவாக்குகள் ஆனதால் அவற்றின் பொருளை இலேசான படிப்பால் மட்டும் அறிந்து கொள்ள முடியாது. தர்க்கத்தால்தான் நன்றாக அறிந்து கொள்ளலாம். இவ்வறிவு வளர வளர அதில் ஆவலும் வளர்ந்து ஞானப் பாதையில் வேகமாய் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும். அதனால் வேத சம்பந்தமான விடயங்களில் உங்கள் தர்க்க ஆற்றலை உபயோகித்துப் பொருள் அறியுங்கள்.

**நான் பிரம்மமாகவே இருக்கிறேனென்று பாவியுங்கள்:-** பாவனையென்பது என்ன என்று முன் பாடத்தில் விளக்கினேம். ''யத்பாவம் தத்பவதி'' - எதைப் பாவிப்பானே அதுவாக ஆவான். பிரம்மனைத் தியானிப்பதால் பிரம்மமேயாவான் பிரபஞ்சத்தின் உண்மைத் தோற்றமும், வாழ்வும் பிரபஞ்ச பாவனையால்தான் இருக்கின்றது. இப்பாவனை இருக்கும் வரை இவ்வாழ்வும் இருக்கும். இதை மாற்றத்தாலும் இப் பிரபஞ்சமும் உண்மையில் எதுவோ அந்தப் பாவனை தோன்ற வேண்டும் அதுவே பிரம்ம பாவனை' ஏனெனில் பிரம்மம் ஒன்றே சத்தியம் மற்றவை வெறும் பாவனையில் கற்பனைக் காட்சி. இந்தப் பாவனை உண்மையறிந்து, இன்று மேல் நாட்டு மனோதத்துவ அறிஞர்கள், மனிதன் தன் பாவனை சக்தியால் இம்மண்ணுலகில் வேண்டிய இன்பங்களையெல்லாம் உண்டாக்கிப் பெற்று வாழலாம் எனக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான திடபாவனையைப் பழகப் பல வழிகளையும் வகுத்துள்ளார்கள் இதன்படி பயின்ற பலர் அப்பெரு நிலையை அடைந்து பெரு வாழ்வு நடத்தி வருகின்றார்கள். இறைவழி நின்று முத்திப்பேற்றை பெற விரும்புபவர்கள் தம் பாவனையை எப்போதும் பிரம்மத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். பாவனையென்றால் தானே அதுவாய் இருக்க மனதை உருவகப்படுத்தல் என்பதாகும். அதாவது குதிரையைப் பாவனை செய்தலென்றால் தானே குதிரையாய்இருப்பதாக ஐயமற மனதில் உருவகப்படுத்தியிருக்கும் நிலையில் அவன் மனதை படம் பிடித்தால் குதிரையின் வடிவமே விழும். பிரம்ம பாவனை மனம் பிரம்மமாய் இருக்குமென சொல்ல வேண்டுமா? அதனால் எப்பொழுதும் பிரம்ம பாவனையிலேயே இருங்கள்.

**எப்போதும் கர்வம் கொள்ளாதீர்கள் :-** செருக்கால் அழிந்தவர்கள் எண்ணற்றோர். மற்றையோர்க்கு இல்லாத அளவில் செல்வமோ. பலமோ, அதிகாரமோ தனக்கு இருக்கிறது என்ற இறுமாப்பால் கர்வம் உண்டாகும். கர்வத்தால் யாரையும் மதியாமல் ஏளனமாய்ப் பேசவும், சமயம் நேரும் போது மதங்கொண்ட யானையைப் போல் தனக்குத் தானே இன்னல் விளைவித்துக் கொள்ளவும் இடமுண்டாகும். இந்த உண்மைகளை இராவணன், இரண்யன், துரியோதனன், சூரபத்மன் போன்றவர்களின் சரித்திரங்களால் நன்கு அறிவோம். இறைநெறியிற் செல்வோர்க்கு இம்மண்ணுலக இன்பங்கள் நிறைந்திருந்தாலும் கர்வப்பட மாட்டார்கள். ஏனெனில் அவ்வின்பங்கள் அவர்களுக்குத் திருப்தியளிப்பதில்லை. அவைகளால் ஏதோ பேறு பெற்று விட்டதாகவும் அவர்கள் கருதுவதில்லை. பெறவேண்டிய பேற்றுக்கு இன்னும் பெரும்பாடு படவேண்டும் என்று கருதுபவர்கள் எதில் கர்வம் கொள்ளப்போகிறார்கள் அதனால் இறைநெறியிற் செல்ல விரும்புபவர்கள் தமது எந்த உடைமையாலும் கர்வம் கொள்ளக்கூடாது.

**உடலைத் தானென்று கருதுவதை மறவுங்கள் :-** பெரும்பாலும் மனிதர்கள் எல்லோருமே தம்மை உடலில் தான் காண்கின்றார்கள். உடலுக்கு உறும் ஒரு சிறிய கஷ்டம் தங்களுக்கு உற்றதாகவே நினைத்து வேதனைப்படுகிறார்கள். இவ் வேதனையை அடக்க அவர்களால் முடிவதில்லை. ஏனெனில் உடலினும் தாம் வேறு என்பதை சொல்லளவிற்றான் அறிந்திருக்கிறார்களேயன்றி அனுபவத்தில் அறிந்ததில்லை. உடலே தாமாகத்தான் இருக்கிறார்கள். இறைநெறியாளர்களுக்கு அந்நிலை மாறவேண்டும். உடலும் தானும் வேறென்பதைச் சிந்தனையால், சாதனையால் அறிய வேண்டும். அப்படி அறிந்துகொண்டால் உடலுக்கு உறும் துன்பங்களால் வேதனைப்படமாட்டார்கள். உடலின் துன்பத்தை அகற்ற நிதானமாய் முயல்வார்கள். பிறர் துன்பங்கள் தமக்கு வேதனை தராதது போலவும் தம் உடல் துன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கள் அவர்களுக்கு வேதனை தராது பிறர் துன்பங்களை நிதானத்துடன் விலக்க முயற்சிப்பது போலவே தம் உடல் துன்பத்தையும் விலக்க முயற்சிப்பர். வேதனைக்கு இடமில்லை. சரீராபிமானம் பிறவிக்கு வழிகோலும். இந்த அபிமானத்தைத் துறக்கத் துறக்கத் தீவிரமான ஆத்ம விசாரணை (தன்னிலேயே விசாரித்துப் பார்த்தல்) வேண்டும். ஆகையால் உடலைத்தானென்று கருதுவதை விசாரணையாலும், சாதனையாலும் மறந்து விடுங்கள்.

**அறிவாளிகளிடம் தர்க்கம் செய்யாதீர்கள் :-** அறிவாளிகள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அன்றி அவர்களிடம் தர்க்கம் செய்யக்கூடாது. நமது கேள்விகளுக்கு, அவர்கள் நிலையில் இருந்து சொல்வதை நாம் புரிந்துகொள்ள முடியாது. அது நமக்குத் தேவையில்லை. இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நிச்சயம் இல்லாதபோதுதான் எப்படி என்ற தர்க்கம் வேண்டும். இப்படிச் செய்யென்று அறிவாளிகள் சொல்வதைச் செய்ததாலேயே நமக்குத் தேவையான பலன்கள் கிடைக்குமானால் தர்க்கத்துக்கு இடமில்லை. அன்றி தர்க்கத்தால் இறைவனை அறியவேமுடியாது. ஆகையால் அறிவாளிகள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடவுங்கள் அவர்களுடன் தர்க்கம் செய்யாதீர்கள்.

**உட்பொருள் :-** இறைநெறியில் நின்று முத்திப்பேற்றையடைய வேண்டுமானால் இறைநூலாம் வேதங்கள் கூறும் உபதேச வழியில் நின்று, அவ்வுபதேசப் பொருட்களையே நன்கு விசாரித்தறிந்து, சித்தத்தில் பதித்து, பிரம்ம பாவனையிலேயே மனதை ஈடுபடுத்தி, சரீராபிமானத்தைத் தூயவிசாரணையில் விட்டு சன்மார்க்க அனுபூதியாளர்கள் காட்டும் வழியில் சந்தேகத்தை நீக்கி நடக்க வேண்டும்.

**ப்ரஹ்ம வித்யா விளக்கம் :-** பக்தி, ஞானம், தவம், யோகம் என்பவை எல்லாம் ஒரே குறிக்கோளை அடைவதற்கான பல வழிகளே. அக்குறிக்கோள் பிரம்ம பாவனைதான். அப்பாவனை நிலையை நிலைப்படுத்தவே பல சாதனைகள். இறைவன் ஒன்றே. அவனை அடையும் வழியும் பாவனையும் ஒன்றே. பல வழிகள் அப்பாவனையை நிலைப்படுத்துவதற்கே. பாவனை கைவசம் வந்தவர்கள். இகத்திலும், பரத்திலும் எல்லா இன்பங்களையும், இருந்த இடத்திலிருந்தே பெற்று இன்பமாய் வாழ்வார்கள். இவ்வுலகில் நிம்மதியாய் வாழப்பெற முடியாதவர்கள் இறைசாதனையிலும் வெற்றியடைவது கடினம். இவ்வுலக நிம்மதியை கர்மப் பிற பாவங்களுக்கு எதிராகப் பெறுவதும் இயலாது. கர்மம் பிற பாவங்களின் சூழல்களில் உழன்று கொண்டே வைராக்கியமாக பாவனையில் சித்தி பெற்று விட்டால் மற்றெல்லா நலன்களையும் பெற்றுவிட முடியும். அதிலிருந்து பிரம்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சாத்காரத்தையும் பெறலாம்.

உபதேச விளக்கம் :- எப்பாடுபட்டாயினும் பாவனையைக் கைவசப் படுத்த முயற்சியுங்கள். நீங்கள் மேற்கொண்டிருக்கும் சமய மார்க்கம், சாதனமார்க்கம் எதுவாயிருந்தாலும், அவற்றைக்கொண்டு பாவனையைக் கைவசப்படுத்த முயற்சியுங்கள். பாவனை கைகூடப் பெறும்போது தானகவே நீங்கள் எதிர்பாராத நம்பமுடியாத நன்மைகள் எல்லாம் உங்களை நாடி வரக்காண்பீர்கள். பாவனையைப் பயிலுங்கள்.

# IV

**கருத்து:- பசியை நாள்தோறும் உணவால் தணியுங்கள்; பிச்சையெடுத்து உண்ணுங்கள். சுவையான உணவுகளை உண்டிகளை விரும்பாதீர்கள்; வினைப்பயனைக் கிடைப்பவைகளில் திருப்தியடையுங்கள். சூடு. குளிர் போன்ற இருமைகளை பொருத்துக் கொள்ளுங்கள். வீணை வார்த்தைகளைப் பேசாதீர்கள்; அசட்டையாய் இருக்கப் பழகுங்கள்; பிறரின் இகழ்ச்சி புகழ்ச்சிகளை விலக்குங்கள்.**

வாக்கிய பொருள் : பசியைத் தினமும் தணியுங்கள் :- இறைநெறியிற் செல்பவன் கூடுமானவரை பட்டினியிருக்க வேண்டும்: உண்ணவிரதமிருக்க வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். இது முரண்பட்ட கருத்து. இறைவன் ஆணைப்படி நடப்பவன் அவ்விறைவன் கட்டளையால் உண்டான உடல் தன்பரிணமத்தை முடிப்பதற்கு உதவ வேண்டுமன்றி தடை செய்தலாகாது. முத்திப்பேற்றைப் பெறும் முன் உடற்பொருள் மறுபடி உடலாகக் குவியா வண்ணம் செய்யப் படல் வேண்டும். இதற்கு அதன் பரிணமத்தை அதற்கு கொடுத்தாக வேண்டும். உடலிலிருந்து தான் எல்லாச் சாதனைகளும் வெற்றியடையப் பெற வேண்டும். பலகீனனுய் கடவுள் அறியப்பட முடியாதவர்.

சாதனைகளைச் சரியாகச் செய்து வெற்றியடைய உடலாரோக்கியம் இன்றியமையாதது. உடலாரோக்கியம் தகுந்த உணவில் அடங்கியுள்ளது. பட்டினியால் உடற்தாதுக்கள் தேய்வடையும். இந்நிலையில் மனம், புத்திகள் உடலிலிருந்து செயல்படா. உடலில் செயல்படாதவரை இவற்றில் வளர்ச்சியும் ஆகாது. மனம் புத்தி என்பன வளர்ச்சியடைந்து கட்டுப்பாட்டால்தான் இறைஞானத்தைப் பெற முடியும். இருஷிகளும் காற்று முதலான உணவையுண்டு உடலைக் காப்பாற்றியே வந்தனர். காற்றிலிருந்து உடலுக்குத் தேவையானவைகளை பெறும் ஆற்றலை அவர்கள் கொண்டிருந்தார்கள். பசியோடு எந்த வழிபாட்டையும் செய்யமுடியாதாகையால் பசியைத் தகுந்த உணவால் அடக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிச்சையெடுத்து உண்ணுங்கள் ;-** பிச்சையென்றதும் ஒரு வேலையும் செய்யாமல் வேலை செய்து சம்பாதிப்பவர்களிடம் இரந்து பெறல் எனப்பலர் தவருகப் பொருள் கொண்டிருக்கிருர்கள். பிறருக்காக உழைத்துப் பெறும் ஊதியமே பிச்சை. பிச்சைக்கு மாருனது திருட்டு, இது உழைக்காமலேயே பிறர் சொத்தைக் கவருவதாகும். இன்று ஒரு உழைப்பும் இல்லாமல் பிறரைக் கேட்டு வாங்கும் தொழில் பிச்சையெனப்படுகிறது. தத்துவ நூல்களில் கூறும் பிச்சை இதுவல்ல. ஞாயமான முறையில் உழைத்துச் சம்பாதிப்பதே பிச்சை. உத்தியோகமோ வியாபாரமோ, தொழிலோ செய்வதால் ஈட்டும் பொருளும் பிச்சையே, ஏனெனில் அதுவும் பிறரிடமிருந்து பெறுவதுதானே, அதனுல் இவ்வாக்கியக் கருத்து சோம்பேறியாக இருந்து, கிடைக்கும் உணவை உண்ணுதீர்கள். உழைத்துத் தேடி உண்ணுங்கள் என்பதே பொருள். யோகசாதனையின் ஆரம்பப் படிகளில் இரண்டாவதான நியமத்தில் தபம் - உழைப்பும் ஓர் கட்டளையாகும். பிறந்து, பிறந்து உழைத்ததன் பயனுகவே முத்தியாசை உண்டாகிறது. உழைத்து, உழைத்து உடல் விடுதலை பெறவேண்டும். அதனுல் எப்போதும் சுறுசுறுப்பாக உழைத்து, அதனுல் சம்பாதிக்கும் பொருளைக்கொண்டு வயிற்றை நிரப்பி பசியைத் தணியுங்கள் உழைத்துச் சம்பாதிப்பதிலேயே குடும்ப நிர்வாகம் செய்யுங்கள்.

**சுவையான உண்டிகளை விரும்பாதீர்கள்:-** பசிக்குதான் புசிக்க வேண்டும். ஆனுல் பலர் பசியில்லாத போது சுவைப்பதற்காகப் பசிக்கிருர்கள். பல்வகைச் சுவைகளின் பேரில் உண்டாகும் ஆசையை உண்டு தணித்துக் கொள்ள முடியாது. அதனுல் ஆசை வளர்ந்து கொண்டே போகும். பசிக்காக மட்டும் தேவையானதை, சுவையில்லாவிட்டாலும் உண்ணவேண்டும். உடலுக்கு நலம் தரும் மருந்துகள் சுவையானவையல்ல. ஆனுலும் அவைகளை உண்ணத்தானே வேண்டும். உடல் நலம் கருதினுல்? சுவையுண்டியில் மனம் இயங்கும் போது உடல்நலமானது ஒரு நாளும் கட்டுக்கடங்காது. மனதை அடக்க விரும்புபவர்கள் சுவை அனுபவங்களை மனதுக்குத் தர முயற்சிக்கக் கூடாது. அதனுல் எப்போதும் பசிக்கு மட்டும் தேவையானவற்றை உண்ணுங்கள். சுவையின்பத்துக்காக உண்பதை மறந்து விடுங்கள்.

**வினைப்பயனுகக் கிடைப்பதில் திருப்தியடையுங்கள் :-** அரும்பாடுபட்டு உழைத்து அளவுக்கு மேல் எதுவும் கிடைக்கப் பெருமல் மனம் வருயுயவர்கள் பலர். எவ்வளவு உழைத்தாலும் வினைப்பயனின் அளவாகத்தான் எதுவும் கிட்டும் என்பதைப் பலர் உணர்வதில்லை. வீணுன உழைப்பும் மனக்கவலையும் தான் இத்தகையோர் கண்ட முடிவு. ஆசைக்கோர் அளவில்லை. ஆனுல் அனைத்தையும் ஒருவன் பெறவே செய்வானென்று எதிர்பார்க்க முடியுமா? தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் பெற்றுவிட்டேன் என்று சொன்ன மனிதன் ஒருவனும் இவ்வுலகில் இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. போதுமென்ற மனதையே பொன் செய்யும் மருந்தாகக் கொள்பவன் தான் நிம்மதியாக, கவலையில்லாமல் வாழ முடியும். முயற்சி செய்யத்தான் வேண்டும். ஆனால் அதனால் ஒருவனுடைய எல்லாத் தேவைகளும் நிறைவேறுமென்று எதிர்பார்க்கலாகாது. கடின உழைப்பின் பேரில் எவ்வளவு கிடைக்குமோ, அவ்வளவு தான் தனக்குக் கிடைக்கப்பெற வேண்டியதெனத் தெரிந்து அதனுள் திருப்தியடைந்து வாழ வேண்டும். அறியாமையில் உழல்பவர்களைப் போல் இறைநெறியிற் செல்பவர்கள் தம்வினைப்பயனுக்கு மேலாக உழைப்பால் ஊதியம் கிடைக்குமென எதிர் பார்த்து கிடைக்காததால் மனம் நொந்து வாடாமல், நன்கு உழைத்து அதில் கிடைக்கும் அளவிற் திருப்தியடைந்து வாழ முயற்சிக்க வேண்டும்.

**சூடு, குளிர் போன்ற இருமைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள் :-** வாழ்நாள் முழுவதும் இன்பமேயாக அல்லது துன்பமேயாக வாழ்ந்தவர் யாருமில்லை. இரவு, பகல் போல் இன்பமும், துன்பமும் எல்லோரது வாழ்விலும் மாறி மாறி வரத்தான் செய்யும். இன்பம் வந்தபோது இன்புற்றும் துன்பம் வந்தபோது துன்புறுவதும் பாமர மக்களின் இயல்பு. இறைநெறி செல்வோர் இன்பத்தில் இன்புறாமல்; துன்பத்தில் துன்புறாமல் எப்பொழுதும் நடுநிலையாய் இருந்து வரவேண்டும். இதுவே யோகம் எனப்படும். சூடு, குளிர், இன்ப, துன்பங்களின் நடுநிலைத் தன்மையை யோகம் என்கிறது கீதை. இன்ப துன்பத்தைக் குளிர், சூடாகக் கூறுவது மரபு. வெயிற் காலமும் குளிர் காலமும் மாறிவராமல் காலம் இயங்காது; வாழ்க்கையும் இன்ப துன்பமின்றிக் கழியாது. இன்பத்தில் இறுமாந்தும், துன்பத்தில் துயருற்றும் வாழ்பவனின் மனமாயை உறுதிபெறும். முக்தி நெறிக்கு இவன் முயல்வதிற் பயனில்லை. அதனால் எப்போதும் இன்ப துன்பங்களில் ஆழ்ந்துவிடாமல், சமமாகப் பொறுத்து, நடுநிலையாய் இருங்கள்.

**வீணன வார்த்தைகளைப் பேசாதீர்கள்:-** பாமர மக்கள் பேசுவதிற் பல அவைகளுக்குத் தேவையற்ற பயனில்லாத வார்த்தைகளே. அரசியல் நாவல், உலக விவகாரங்களைப் பற்றி பல மணி நேரம் பேசுபவர்களில் பெரும்பாலோர் அவைகளில் சம்பந்தமே இல்லாதவர்கள். அவைகளால் அவர்கள் பெறப்போவதும் யாதுமில்லை. வீண் வார்த்தைகளால் மனக்குழப்பத்தை தவிர யாதொரு பயனுமில்லை. மனக்குழப்பமுடையோர் இறைநெறியில் முன்னேற முடியாது. சக்தி வீணும், காலம் போகும், மனம் சஞ்சலமடையும். அதனால் எப்போதும் தேவையில்லாத வீண் வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

**அசட்டையாய் இருக்கப் பழகுங்கள்:** எதைப் பார்த்தாலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சிப்பவர்கள் பலர். இதன் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையடையவும், அனுபவிக்கவும் முயற்சித்து பலன் கிடைக்காமல் கவலைப்படுவர். தெரிந்து கொள்ள முயற்சித்திருக்காவிட்டால் இக்கவலை வந்திருக்காது. ஆகையால் மனதைக் கெடுக்கும் ஆர்வத்தைத் தூண்டும்படியாய், உலக விடயங்கள் எதிலும் கவனத்தைச் செலுத்தாமல் பராமுகமாய், அசட்டையாய், தேவையானவைகளை நடுநிலை மனத்துடன் அறிந்தபடி வாழவேண்டும்.

**பிறரின் இகழ்ச்சி, புகழ்ச்சிகளை விலக்குங்கள் :-** மனிதன் நல்லவனாய் வாழ்ந்தாலும் கெட்டவனாய் வாழ்ந்தாலும் சிலர் புகழ்வார்கள். சிலர் இகழ்வார்கள். உலகில் தோன்றிய மகான்களையும் சிலர் இகழச்சிலர் புகழ்ந்தனர். இரண்டும் பெறுத நிலையில் வாழவே முடியாது புகழ்ச்சி வேண்டின் பல தேவையற்ற, தகாத காரியங்களைச் செய்ய வேண்டிவரும், அது முடியாது போனால் இகழ்ச்சி உண்டாகும். பின் நிம்மதியாய் வாழ்வதுதான் எப்படி புகழ்ச்சி இகழ்ச்சிகளில் பற்றோ கவலையோ கொள்ளாமல் தன் கடமைகளைப் பற்றிச் சிந்திக்காமலிருக்க மனதில் இடம் கொடுக்கவோ கூடாது.

**உட்பொருள் :-** எதிலும் மனதைப் பறிகொடுக்காமல் தனக்குத் தேவையில்லாத எதைப் பற்றியும் தெரிந்துகொள்ள முயற்சிக்காமல் உண்மையுடன் நன்கு உழைத்து அதனால் கிடைப்பதைக் கொண்டு உடலைப் பேணி வாழ்க்கையிலும் இன்ப துன்பங்களில் நடுநிலைமை கொண்டு, தன் கடமைகளைச் செய்வதாலேற்படும் புகழ்ச்சி, இகழ்ச்சிகளைப் பற்றி எவ்வித உணர்ச்சியும் கொள்ளாமல் சமமாக யோக வாழ்க்கை நடத்த வேண்டும்.

**பிரம்ம வித்யா விளக்கம் :-** மனிதனுக்கு அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என ஐந்து கவசங்கள் உள்ளன. இவ்வைந்திலிருந்தும் விடுதலை பெறும்போதுதான் உண்மையில் தன்னை யாரெனவும், தன் தலைவனை யாரெனவும் உணர்வான். இக்கோசங்களிலிருந்து முற்றும் விடுதலை பெறவேண்டுமானால் அவனுடையவையாய் பிறவிதோறும் கூடிவரும் இக்கோசப் பொருட்களை அவைகளின் பரிணாமப்படி, பரிணமித்து, மறுபடி திரளாத நிலைக்கு மாற்ற வேண்டும். இப்படிச் செய்ய அவற்றின் பரிணாமத்தைத் தடுக்காமல் விரைவில் முடிக்க உதவ வேண்டும். இதனால்தான் ஜீவன் முக்தியை விரும்புபவன் தன் உடல், மன அறிவு, சித்தங்களை வளர்த்து பரிணமிக்கச் செய்ய வேண்டும். வளர்ச்சியை தடுக்கக்கூடாது.

**உபதேச விளக்கம் :-** பட்டினி கிடக்காதீர்கள். அதிகமாகப் புசியாதீர்கள். தேவையானதை பேசாமலிருக்காதீர்கள், தேவையில்லாதவைகளைப் பற்றிப் பேசாதீர்கள். எப்போதும் சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருங்கள், போதுமென்ற மனதுடன் வாழுங்கள், நன்மை' தீமை, புகழ்ச்சி, இகழ்ச்சிகளில் உணர்ச்சி மாறுதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V

கருத்து:- கூடுமானவரை தனிமையாக இருக்கப் பழகுங்கள்; எப்போதும் மனதை இறைவனிடம் ஈடுபடுத்தி இருங்கள்; நிறைவான ஆத்மாவையே பாருங்கள்; பிரபஞ்சம் முழுவதும் அப்பரம் பொருள் இருப்பதாகக் காணுங்கள்; பூர்வ வினையை அழியுங்கள்; அறிவு பலத்தால் கர்ம பலன்கள் சேராமல் செய்யுங்கள்; ப்ராப்த கர்ம பலனை இப் பிறவியிலேயே அனுபவியுங்கள்; உங்களை எப்போதும் பிரம்மத்தில் இருத்தியிருங்கள்.

தனிமையாக இருக்கப் பழகுங்கள்:- இனிது இனிது ஏகாந்தம் இனிது. உடலாலும், மனதாலும் எச்சிறு காரியத்தையும் செய்யும்போதும் தன் சரீரமான சக்தி செலவாகிறது. சக்தி செலவாகாமல் செய்யக் கூடிய காரியம் யாதுமில்லை. பிறரிடம் நெருங்கும் போது சும்மாயிருப்பது கடினம். அவருடன் பேசுவோம் அல்லது அவரைப் பார்த்து அவரைப் பற்றி நினைக்கச் செய்வோம். அல்லது அவர் வேறு யாரிடமோ பேசுவதைக் கேட்கச் செய்வோம். இவ்வாறே பல பொருள்களுக்கிடையே இருக்கும்போது அவைகளைப் பார்த்துக் கொண்டும், அவைகளைப் பற்றி நினைத்துக் கொண்டுமிருப்போம். இதுமட்டுமல்ல பிற பொருள்களுடன் நெருங்கியிருக்கும் போது நம் காந்தசக்தி அப்பொருள்களில் பாய, அவைகளின் சக்தி நம்மில் பாயும். இப்படி நம்மில் பாய்வது நமக்குத் தீமையும் செய்யலாம். தனிமையிலிருக்கும் போது பிறவற்றைக் காண, நினைக்க காந்தம் ஏற்கத் தேவையில்லாமலிருப்பதால் நம் உடல்மன சக்திகள் வீணுகச் செலவாகாமல் நம் பவித்ர, காந்த சக்தி கெடாமலுமிருக்கும். தனிமையாயிருக்கும் நேரம் அதிகமாக ஆக நம் சக்தி குறைந்த அளவே செலவாகி நெடுநாளைக்கு நாம் சக்தியுடன் இருக்கவும் நாம் முயலும் இறைநெறியில் சோர்வின்றி முன்னேறவும் முடியும். வீணு மனக்கலக்கங்கள் உண்டாகத் தேவையற்ற பிரபஞ்ச ஞானம் பற்றுவதும் குறையும். தடையின்றி இறைவன் தியானத்தில் மனம் ஈடுபடும். அதனுல் நாள்தோறும் ஒய்வு நேரத்தில் எல்லாம் தனிமையாயிருந்து கழிக்கப் பழகுங்கள்.

எப்போதும் மனதை இறைவனில் ஈடுபடுத்தியிருங்கள்: மனமே மாயையின் இருப்பிடம். மனம் எவ்வழியோ அவ்வழிதான் வாழ்க்கையும் அமையும். மனமாகிய குரங்கை வசப்படுத்தாதவன் அறியாமையில் ஆழ்ந்தபடி மனம் இழுத்துச் செல்லும். எல்லாப் பக்கங்களிலும் காரணம் தெரியாமலேயே ஓடி, கர்மங்கள் பலவற்றை அவை என்ன பயன் தருமென்று தெரியாமலேயே செய்து வினையைச் சேமித்து முடிவற்ற பிறவிகளில் உழன்று கொண்டிருப்பான். மனதைப் பிரபஞ்சப் பொருள்களில் ஈடுபடுத்தி வசப்படுத்த முடியாது. ஏனென்றுல் அப்போது மனம் பிரபஞ்சப் பொருட்களில் ஆசையைத் தூண்டிவிட்டு, சித்தத்தில் பிறப்புக்கான வினையையே புகுத்தி வர சந்தர்ப்பம் இல்லாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான வழி இறைவனைப் பற்றி நினைக்கப்பழகுவதுதான். இறைவனுடன் ஒன்றறக் கலத்தலே முடிந்த குறிக்கோளாகையால் அதனைப் பெற அதே பொருளில் மனதை ஈடுபடுத்தி வரவேண்டும். ஆகவே இறைவன் பேரருள் பெற விரும்புபவர்கள் நம் மனதை எப்போதும் இறைவனைப் பற்றிய எண்ணங்களிலேயே இயக்கப் பழக வேண்டும்.

**நிறைவான ஆத்மாவையே பாருங்கள்:** ஞான வடிவான, சக்தி வடிவான ஆத்மா தன்னை அறிவற்ற சக்தியற்ற பொருளாகக் கருதி, பௌதீக பிரபஞ்சத்தில் இன்ப துன்பங்களால் சுழன்று கொண்டிருக்கக் காரணம் அதனுடைய ஆரோகனத் தன்மைதான். அதாவது ஒரு கண்ணாடி முன் சிகப்புத் துணியொன்றைப் பிடித்தால் அக்கண்ணாடியும் சிவப்பு ஒளிக் கிரணங்களையே தன்னிலிருந்து பரப்புவது போல் ஆன்மா பௌதீகப் பொருட்களுடன் தொடர்பு கொள்ளும்போது அப் பௌதீகப் பொருளாகவே தன்னைக் கருதி விடுகிறது. இவ்வாரோகனத்தால்தான் அதற்குப் பௌதீகப் பொருட்களில் பற்றுண்டாகி பிறக்கவும், இறக்கவும் செய்கிறது. கண்ணாடியில் சிவப்பைக் கண்டாலும், அது கண்ணாடியின் நிஜ நிறமல்ல, கண்ணாடியின்உண்மை நிறம் வெள்ளைதான் என எப்படி அறியலாமோ அதுபோல் பௌதீகப் பொருள்களில் ஆன்மா ஈடுபட்டிருந்தாலும், ஆன்மாவுக்கு உண்மையில் பௌதீகத் தன்மையில்லையென அறிய வேண்டும். இப்படி அறிந்தால் பௌதீகப் பொருட்களிலுள்ள பற்று அறும், பிறவி மாறும். ஆத்மா காணப்படும் பிரபஞ்சம் முழுவதும் நிறைவாய் இருக்கிறது. பொருளின் வேற்றுமையாலும், இடைவெளியாலும், அது வேற்றுமையுள்ளதாகவும், இடைவெளியுள்ளதாகவும் காணப்படுகிறது. ஆனால் ஆன்ம விடுதலை பெற விரும்புபவர்கள் பொருள்களின் தன்மைகளை ஆன்மாவில் கற்பனை செய்யாமல் எங்கும் நிறைந்துள்ள ஆன்ம ஸ்வரூபத்தையே காண முயல வேண்டும். சிவப்புக் கண்ணாடியைக் கண்டாலும், வெள்ளைக் கண்ணாடியையே நினைவு படுத்துவது போல பிரபஞ்சப் பொருட்களைக் காணும் போதெல்லாம், அவைகளில் கலந்து நிறைந்திருக்கும் அந்த ஆன்மாவையே நினைவு படுத்த வேண்டும். அதனால் எப்போதும், எதிலும், ஆன்ம நினைவைக் கொள்ள முயற்சியுங்கள்.

**பிரபஞ்ச முழுவதிலும் பரம்பொருள் இருக்கக் காணுங்கள்:**

ஒரு காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அக் காரியத்தைச் செய்யும் சக்தி, காரணம் அக்காரியத்திலேயே இருக்க வேண்டும். ஒரு இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கும் போது, அதை இயக்கும் மின்சக்தி இயந்திரத்தில் தானே இருக்க வேண்டும். பிரபஞ்சம் ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய இயந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இயந்திரத்தை இயக்கும் சக்தி இறை சக்தி, அப்படியானல் பிரபஞ்சம் முழுவதும் இறைசக்தி எப்போதும் இருந்து வருமல்லவா? இயந்திர இயக்கத்தைக் காணும் போது, அதை இயக்கும் சக்தி அதிலேயே இருக்க வேண்டுமென்று அறிவது போல், பிரபஞ்சப் பொருளைக் காணும் போது அவ்வடிவில் அமைத்து வைத்திருக்கும் இறை சக்தி அதில் இருக்க வேண்டுமல்லவா? பொருள்களைக் காணும் போதெல்லாம் அதன் அமைப்புக்கு ஆதாரமாய் அதில் இறைசக்தி இருக்கிறதென அறிய வேண்டும். இதனையே, உண்ணும் சோறும் கண்ணன், பருகும் நீரும் கண்ணன் என்று ஆழ்வாரும், எள்ளுக்குள் எண்ணெய் போல் இறைவன் எதிலும் இருக்கிறன் என்று மற்றையோரும் கூறியுள்ளார்கள். அதனல் பார்க்குமிடமெங்கும், பொருளெங்கும் இறைசக்தி இருப்பதாக நினைவுபடுத்தி வரவேண்டும்.

**பூர்வ வினையை அழியுங்கள்:-** இப்பிறவியில் செயற்படத் தொடங்கிய வினைக்கோர்வை பிராரப்தம். இன்றும் பல பிறவிகளையும், வாழ்க்கை முறைகளையும் உண்டாக்க சித்தத்தில் காத்திருக்கும் வினைக்கோர்வை சஞ்சிதம் எனப்படும். பிராரப்த கர்ம அனுபவத்தின் போது செய்யும் கர்மங்களின் பயனை சித்தத்தில் படியும் கர்மக் கோர்வை ஆகாமியம் என்றும் சஞ்சித கர்மங்கள் அப்படியே இருக்கும் வரை பக்தி, யோகம், ஞானம் எதுவும் முக்தியைத் தராது. முக்திசாதனைகள் கூடவே இச்சஞ்சித வினைக்கோர்வையையும் அழித்தாக வேண்டும். இதற்கு அவ்வினையை செயல்படாமல் தடுத்தும், ஞானத்தால் எரித்தும் அழிக்க வேண்டும். ஞானமாகிய நெருப்பு பற்றினல் சஞ்சித வினையானது பஞ்சு போல் எரிந்து சாம்பலாகிவிடும். அஞ்ஞானம் இருக்கும் வரைதான் கர்ம வினைகள் செயற்பட்டுப் பலன் தரும். மெய்ஞானம், தோன்றிவிட்டால் சஞ்சிதம் செயற்பட முடியாமல் சித்தத்தில் அழிந்துவிடும். ஆகவே உண்மையான அனுபவ ஞானம் பெற்று சஞ்சிதவினையை அழியுங்கள்.

**அறிவு பலத்தால் கர்ம பலன் சேராமல் செய்யுங்கள்:-** அறிவு பலமடைந்தால் செய்யும் கர்மங்களின் பலன் சித்தத்தில் வினையாகப் பற்றுது. ஒரு பொருளைக் காண்கிறேம், அறியாமையால் அது நமக்கு இன்பமோ, துன்பமோ உண்டாக்குமென நினைக்கிறேம். எனவே அதை அடையவோ, அல்லது விலக்கவோ முயலுகிறேம் எனறல் அதனுடன் நம்மை ஈடுபடுத்திக் கொள்கிறேம். நாம் ஈடுபடும் எந்தக் கர்மமும் சித்தத்தில் வினையாகப் படிந்து விடும். பொருளைக் கண்டதும் அறிவு பலத்தால், ஞானவடிவான நமக்கு அது இன்பமோ, அன்றி துன்பமோ பயக்காது என அறிந்து நின்றல் வினை படிவதற்கு வழியில்லை. இதனையே முன் உபதேசத்தில் அசட்டையாயிருக்கவும் எனச் சொல்லப்பட்டது. ஆகையால் எப்பொழுதும் செய்யும் கர்மங்களின் பலன் சித்தத்தில் படியாதபடி அறிவுத் தெளிவுடன் கர்மம் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராரப்த கர்மத்தை இப்பிறவிலேயே அனுபவியுங்கள்:-** வெளிப்பட்டுச் செயல்படத் தொடங்கிய கர்மக் கோர்வை பிராரப்தம் எனப்படும். இது முழுவதும் அனுபவித்துத் தீர்க்கப்படா விட்டால், மிகுதியாயிருப்பதை அனுபவிப்பதற்காக மறுபடியும் பிறவியெடுக்க வேண்டிவரும் சாதனையால் பெறும் சக்தியாலோ உபாசனுபலத்தாலோ பிராரப்த கர்மங்களை தடுத்தால் நிச்சயம் பிறவியெடுத்தாக வேண்டும். இதனுற்றுன், மாபெரும் ஞானிகளும் பல துன்பங்களையும், நோய்களையும் அனுபவித்தனர். அவர்கள் விரும்பியிருந்தால் இவைகளைத் தடுத்திருக்க முடியும். அப்படித் தடுத்தால் மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதை அறிந்தே அவர்கள் தடுக்காமல் அவற்றின் உபாதைகளை அனுபவித்துத் தீர்த்தார்கள் ஆனுல் அவர்களது அனுபவத்துக்கும் சாதாரண மக்களின் அனுபவத்துக்கும் வேற்றுமை உண்டு. சாதாரண மக்கள் அக் கர்ம உபாதனைகளை வேதனையாகவே அனுபவிப்பர், மகான்கள் அவற்றை வேதனையாகக் கொண்டு வருந்தாமலே அனுபவித்துத் தீர்ப்பர். அதனுல் பிராரப்த கர்மத்தால் விளையும் நன்மை, தீமைகளில் மனதைப் பறிகொடுத்து விடாமல் மறுபிறவி வேண்டாமென்ற கருத்துடன் அதைத் தடை செய்யாமல் பொறுமையுடன் அனுபவித்துத் தீர்த்து விடுங்கள்.

**உங்களை எப்போதும் பிரமத்தில் இருத்தி விடுங்கள்:** வீட்டிலுள்ள போதும், வெளியிலுள்ள போதும் நாம் காற்றிலேயே இருக்கிறோம் என்பதை எளிதில் அறியலாமல்லவா? மீன்களின் வாழ்க்கை முழுவதும் நீரில் தானே இருக்கிறது? பிரம்மம் எங்கும் இருக்கிறதென நாமறிவோம். அப்படியானுல் அதற்குப் புறம்பாய் நாம் எப்போதாவது இருக்க முடியுமா? ஆனுல் நாம் எமக்குத் தென்படும் பொருட்களில் ஐம்பொறிகளுக்குப் புலனுகும் பொருள்களில் மட்டும்தான் இருப்பதாகக் கருதுகிறோம். உள்ளிருக்கும் இறைவனை உணரப்பெற முடியாமையால், உணரபெற முடியா விட்டாலும்இறைவன் இருக்கிறுன் என்பதை அறிந்து கொண்டே நாம் எங்கும் அவனில் இருந்தபடியே எல்லாம் செய்வதான நினைவுடன் இருக்கலாமல்லவா? அதனுல் எப்போதும் இறைவியாபகத்திலேயே இருப்பதாக நினைவு கொண்டிருங்கள்.

**உட்பொருள்:** இறையருள் பெற விரும்புபவர்கள் எங்கும், எதிலும் இறைவன் இருப்பதாகவும் அவன் வியாபகத்திலேயே தான் வாழ்ந்து வருவதாகவும் நினைத்து எதிர்படும் இன்ப துன்பங்களில் மனதைப் பறிகொடுத்து விடாமல் சம நிலையில் அவைகளை உறுதியுடன் அனுபவித்தபடி பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாமல், எப்போதும் இறைவன் நினைப்பாகயேயிருந்து, இப்படியிப்பதற்கு இடையூறு நேராதபடி கூடுமானவரை தனியாயிருந்து சாதனையில் ஈடுபட்டு வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம வித்யா விளக்கம்: அணுக்களின் கலப்பு குறுக்கமே பௌதீகப் பெரும் பொருள்கள் எல்லாம். இறைபொருளின் நிலைவேறுபாட்டின் தோற்றமே பிரபஞ்சக் காரணப் பொருளாம். இறைவனைக் காணாது காரியப் பிரபஞ்சத்தை அப்படியே உண்மையெனக் கூறுவது அறியாமை. அறியாமையால் விளைவனவே அனர்த்தங்கள். அனர்த்தம் மாற அறியாமை அகல வேண்டும். அதற்கு எங்கும் எப்போதும் இறைவனே இருக்கிறான் என்ற அனுபவ உணர்வு வேண்டும். உண்மைத் தெளிவாய் இந்த அனுபவ உணர்வு உண்டாகி சஞ்சித கர்மம் அழிந்து முக்தி கிட்டும்.

உபதேச விளக்கம்:- பிறவிப் பெரும் பணியை வெல்ல எளிதான வழி, எப்போதும் தான் இறை வியாபகத்திலேயே இருப்பதாக எண்ணி ஐம் பொறிகளால் தொடர்பு கொள்ளும் அனைத்தும் அவன் மாறுதல்களே என உணர்ந்தபடி, எப்போதும் அவன் நினைவாகவே இருந்து, இன்பதுன்பங்களில் கவனம் வையாது வாழப்பழகுவதேயாகும். இவ்வுபசேதத்தைப் புரிந்து கொண்டால் எல்லோருமே இத்தகைய தெய்வ வாழ்க்கையை நடத்த முடியும்.

கருத்து: எவன் நாள்தோறும் இந்த ஐந்து சுலோகங்களையும் படித்து நிலையாயிருந்து சிந்திக்கிறானோ அவனுடைய நெருப்புப் போன்ற பயங்கர உலக துன்பங்கள் மனக்களிப்படைய விலகும்.

தினமும் படித்தல்:- பள்ளி மாணவர்கள் ஆசிரியர் கேட்டால் ஒப்புவிக்க வேண்டுமென்பதற்காகப் பாடங்களை நெட்டுருப் போட்டுப் படிக்கிறார்கள். இப்படிப்படிப்பதால் பிற்காலத்தில் அவை வாழ்க்கைக்குப் பயன்படுவதில்லை. காரணம், வெறும் பாடத்தைப் படித்தார்களேயன்றி அதன் பொருளை உணர்ந்து, சிந்தித்துத், தெளிந்து கொண்டார்களில்லை. வேதவழி நூல்களை இப்படிப் படிப்பதால் யாதும் பயனில்லை. நிதானமாய், சொல்சொல்லாக, வாக்கியம் வாக்கியமாகப் பொருளறிந்தபடி படிக்க வேண்டும். பலமுறைப் படித்து பாடமாகி விட்டது, இனிப்படிக்க வேண்டியதில்லை எனவும் கருதக்கூடாது. படிப்பது ஓர்மனப் பயிற்சி மனதுக்கு எப்பொழுதும் இறை நூல் பயிற்சியளிக்க வேண்டுமாகையால் மனப்பாடமாய் இருந்தாலும் படிப்பதை நிறுத்தக்கூடாது. இறை நூல் படிப்பதை விடக்கூடாது. என்பது உபதேசம், யோகப் படிகளில் நியமத்தில் ஒன்றாகப் படிப்பு வைக்கப்பட்டுள்ளது. ஆக இச்சுலாகங்களைப் படிப்பதால் கிடைக்கும் என்று சொல்லப்படும் நன்மையைப் பெறவேண்டுமானால் மந்த்ரஜபம் போல் இதைத் தினமும் படிக்க வேண்டும்.

நிலையாயிருந்து சிந்தித்தல்:- கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்றும் இறைஞானம் பெறுவதற்கான முதல் சாதனைகள். இச்சாதனைகளை மேற்கொள்ளாத யாரும் இறைநெறியில் முன்னேற முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்ததை நன்ருகச் சிந்தித்தால்தான் பொருட்தெளிவுண்டாகும். தெளிந்த பொருள்தான் சித்தத்தில் படிந்து வாழ்க்கையை மாற்ற உதவும். இந்தப் பதில் நிலே வேண்டும். சஞ்சல மனத்துடன் சிந்தனையி லிறங்கிஞல் தவருன முடிவுகளே கிடைக்கும். அதனுல் நிலைபெற்று ஏகாக்கிர மனதுடன் இறைநூல்களைப் படித்தறிந்து விடயங்களைச் சிந்தித்து தெளிவடையுங்கள்.

**நெருப்புப் போன்ற பயங்கரத் துன்பங்கள்:-** நெருப்பு பற்றிய பொருட்களை எரித்துச் சாம்பலாக்கி விடுகிறது. துன்பப்படுபவனின் வாழ்க்கையும் சாம்பல் போலாகிவிடும். துன்பத்தால் மனசக்தியும், உடல் சக்தியும் வீணுக, வேகமாக, அதிகளவில் செலவழிந்து போகின்றன. பாம்பைக் கண்டால் கடித்து விடுமா என்று அஞ்சுவது போலத் துன்பங்களைக் கண்டும் அஞ்சுகிறேம். அதிக துன்பத்தால் இளமையில் மூப்படைந்தோர், செல்வமிருந்தும் வறுமையாய் வாழ்ந்த தவர் பலர். சிதை உயிரற்ற பிணத்தைச் சுடும். சிந்தனைக் கவலை உயிரு டையஉடலையே சுட்டு விடும். துன்பத்தலையில் சிக்குண்டு தவிப் பவன் பேரின்பப் பெருநெறியில் முன்னேற முடியாது. அதனுல் துன்பமில்லாமல் வாழ்வதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

**துன்பங்கள் மனக்களிப்புடன் விலகும்:-** ஒரு சிறிய துன்பம் வரும் போது அதைப்பற்றியே சிந்திப்பதால் அது பெரிய துன்பமாகி மேலும் பல துனபங்களை வரவழைத்து விடுகிறது. சிறிய நோயும் பயத்தால், சிந்தனையால் பெரிய நோயாக மாறிவிடுகிறது. துன்பத்தி லிருந்து விடுபட விரும்புபவன் துன்பத்தைப் பற்றிச் சிந்திக்ககூடாது. அதற்கு மாருன இன்பத்தைப் பற்றியே எப்போதும் நினைக்க வேண் டும். இன்ப நினைப்புப் பலமடையத் துன்பங்கள் விலகித் போகும். சதா இன்ப நினைப்பே துன்பத்தை விலக்கும் மருந்தாகுமாஞல் பேரின்ப வடிவம் இறைவனைப் பற்றி இன்புறும் வகையில் சிந்திப்ப வர்களுக்கு எந்தத் துன்பம்தான் துன்புறுத்தும்? இறைவன் நினைவி ருக்கும் மனதில் துன்பம் இருக்க முடியாது. அதனுல் எப்போதும் இறைவனை நினைத்து, அந்நினைப்பில் மனம் களிக்கக் கற்பதன் மூலம் துன்பங்களிலிருந்து மீளுங்கள்.

**உட்பொருள்:-** உலகில் துன்பம் இல்லாமல் வாழவே முடியாது. துன் பம் வந்தபோது அதில் சிந்தனையைச் செலுத்திஞல் அது பன்மடங்காகப் பெருகி வாழ்க்கையை நிலைகுலைத்துவிடும். வேதாதி நூல்களை (ஸாத னைபஞ்சகத்தை) தினமும் படித்து, மனதில் சிந்தித்துப் பழகி அதனு லேற்படும் தெளிபொருளில் மனம் களிக்கப்பழகி விட்டால் துன்பங் கள் வரா: வந்தாலும் அதிகமாய்த் துன்புறுத்தாமல் விரைவில் விலகி விடும். அது இருந்து, வளர்ந்து, செயல்பட மனதில் இடமில்லாததாய்ப் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்ம வித்யா விளக்கம்:-** மனமொன்றிப் பலமுறை படிக்கும் எதுவும் மந்திர ஜபம் போலாகும் தனியொரு காந்தத்தை உருவாக்குகிறது. நவீனமாக இதை மேல் நாட்டவர்கள்(ஆட்டோ சஜ்ஜசன்)என்று சொல்லுகிறார்கள். ஒரு சாத்திரத்தைச் சிரத்தையுடன் தினமும் பாராயணம் செய்து சிந்திப்பது ஒரு வகை(ஆட்டோ சஜ்ஜசன்)தான். இப்படி நல்ல சாத்திரங்களைப் பாராயணம் செய்யும் பழக்கம் இருந்தால் துன்பங்களைச் சேரவொட்டாமல் தடுக்கும் ஒரு காந்தம் உருவாகி, இன்பத்தையே பெறும் நிலைக்கு உதவி செய்யும்.

**உபதேசம்:-** வேத சுலோகங்களைத் (ஸாதன பஞ்சகத்தை) தினமும் தவறாமல் நிதானமாகப் படித்து, சற்று நேரம் ஏகாக்கிரகச் சித்தத்துடன் சிந்தித்துவரும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். உங்கள் துன்பம் எல்லாம் மறைந்து இன்ப வாழ்வு கிட்டும். மேலும் நாட்பட்ட பழக்கத்தில் இறையருள் பெறும் பக்குவமும் எம்மில் உருவாகிக் கொண்டே வரும். விரைவில் ஜன்ம சாபல்யம் அடைவீர்கள்.

**உபதேச முடிவுரை:-** விஞ்ஞான உண்மைகள் பலவற்றைக் கண்டுபிடித்ததை கொண்டு அறிவு வளர்ச்சியடைந்து விட்டாகக் கருதும் இக்காலத்து மக்களைவிட முற்காலத்து மக்கள்பிரபஞ்சத்தில் சூக்கும விடயங்களை நன்கறிந்து, அவற்றோடு தம் வாக்ழ்கைத் தொடர்பைக் கொண்டிருந்தார்கள். ஆனால் தாம் மேற்கொண்டுள்ள வழிகளைப் பற்றி அவர்கள் விளக்கம் தரமுடியாதவர்களாய் இருந்தனர். இக்காலத்தவர்கள் முதலில் எதையும் புரியும் வண்ணம் விளங்கிக் கொண்ட பின்பே மேற்கொள்வதை முறையாகக் கொண்டு விட்டதால் பழங்காலத்தவர்களின் வழிமுறைகள் இக்காலத்தவர்களின் வாழ்க்கைக்கு உதவ முடியாமற் போய்விட்டன. ஆனால் இன்றும் பழங்காலத்தவர்கள் மேற்கொண்டிருந்த முறைகளை ஒருவாறு புரிந்தோ புரியாமலோ செய்து பார்க்கலாமெனத்துணிந்து செய்து பார்க்க முற்படும் பலர் அப்பழங்காலத்தவர் அடைந்த நன்மைகளைப் பெற்றே வருகிறார்கள். ஆனால் விஞ்ஞானம் முன்னேற முன்னேற அக்காலத்தவர்கள் விளக்கம் சொல்ல முடியாமல், செய்து பலனடைந்து வந்த பல தத்துவங்கள் விஞ்ஞானத்துக்கு ஒத்தவைதான் என ஆராய்ந்தறியப்படுகிறது.

அக்காலத்தவர்கள் சப்தங்களுக்கு நிறமுண்டு, வடிவமுண்டு, சக்தியுண்டு என்பதையறிந்து சப்த பயனை ஜபம் முதலான சாதனைகளால் அடைந்து வந்தனர். இக்காலத்தவர்கள் நெடுங்காலம் வரை இவ்வுண்மைக்கு விளக்கம் பெற முடியாமலிருந்த காரணத்தால் அப்பயனை அடையாமலிருந்து வந்தனர். ஆனால் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி அம்முன்னோர்களின் நம்பிக்கையில் உண்மை இருக்கிறது என்பதை நிரூபித்து விட்டது. சில கருவிகளின் மூலம் சப்தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தையும், வடிவத்தையும் கண்டு அறிய முடிகிறது. இதனடிப் படையில் கண்டு பிடிக்கப்பட்டதுதான் கிராமபோன் என்னும் கருவி. சப்தத்துக்குச் சக்தியுண்டென்று கண்டதன் பயனுகவே இன்று தாவர வளர்ச்சியில் சங்கீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முன்னேர்களுக்கு ஒரு சூக்சும விதிப்படி அமைக்கப்பட்ட வாக்கி யங்களை ஒரளவு வரை தொடர்ந்து வாயிலோ, மனதிலோ உச்சரித்து வந்தால், உச்சரிப்பவரின் சரீர, மன காந்தத்தில் ஒரு புதுவகைச் சக்தி உண்டாகி, அது சில பலன்களைத் தரும் ஆற்றலைப் பெறுகிறது. எனக் கண்டார்கள். இதனடிப்படையில் தான் ஜப யோகங்களும், பல காரிய சித்திகளுக்கான பல மந்திரங்களும் கண்டு பிடிக்கப்பட் டன. அம்மந்திரங்களை நியமாக இருந்து குறித்த அளவு வரை தவரு மல் ஜெபிக்க சக்தியில்லாதவர்களுக்காகவென்று ஸாதனு பஞ்சகம் போன்ற பல நூல்களைப் பிற்காலத்து மகான்கள் இயற்றினுர்கள். இவற்றைத் தினந்தோறுமோ வாரந்தோறுமோ படித்து வருபவர் களின் உடல், மனக்காந்தத்தில் ஒரு புதிய சக்தி உதயமாகி, சூக்கு மத்துவங்களில் இயங்கி, குறித்துள்ள பலன்களைப் பெறும் சூழ்நிலை களை உருவாக்குகிறது. நீங்கள் படித்தறிந்த ஸாதனுபஞ்சகம் இத்த கைய ஓர் அரிய நூல். அதனுல் இதிற்சொல்லப்பட்ட உபதேசங் களின்படி ஒழுக முடியாவிட்டாலும் நாள்தோறுமோ, வாரந்தோறு மோ இவை ஒருமுறை காலை அல்லது மாலை சுத்தமாய் இருந்து, மனம் கலங்காதபடி நிலையாயிருந்து படித்து வந்தாலும் நாளா வட் டத்தில் உமக்கு நற்பயன்கள் பல கிடைக்கும். அவ்வாறு படிக்கும் போது மனதிலே அதன் பொருளையும் சிந்தித்து வந்தால் விரைவில் பலன்கள் கிடைக்கும். ஒவ்வொரு சுலோகமாகப் படித்து, மனதில் அதன் பொருளை நன்ருகச் சிந்தித்துப் பழகி வந்தால் மேலும் பல நல்ல பயன்கள் கிடைப்பது மட்டுமன்றி உங்கள் சித்த சம்ஸ்காரங் களும் மாறும், வினைப்பயன் சீர்திருந்தும், பிறவிப் பிணியெனும் வழி யில் மெதுவாய் உங்கள் சூக்குமப் பொறிகள் பயன்பட்டு வரும். ஆகவே மாணவர்கள் இந்த அளவிலாவது படித்த பாடத்தைப் பயனு டையதாகச் செய்து கொள்ள முயற்சிக்கவும்.

மேலே சொன்னபடிப்பு சாதனையுடன் மேலும் முன்னேறி இறை யருள் பெற பாடங்களிற் சொல்லப்பட்ட சில எளிய ஒழுக்கங்களை யாவது மேற்கொள்ள முயற்சி செய்து வரவும். உதாரணமாக செய் யும் தொழிலில் கூடுமானவரை குற்றம் இழைக்காதபடி முயற்சிக்க லாம். நல்லோர்களின் நட்பை வளர்த்து, தீயோர்களின் நட்பை விலக்க முயற்சிக்கலாம், நல்ல வித்துவான்கள் ஆற்றும் உபன்யாசங் களை கேட்கலாம், அதன்படி நடக்க முடியாவிட்டாலும் கேட்கும் சம்ஸ்காரமாவது மனதில் படிவது நலம். பிறருடன் தேவையில்லா விடயங்களைப் பற்றி வாக்குவாதங்கள் செய்யாமல் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழ முயற்சிக்கலாம். முன் சொன்ன படிப்பு சாதனையுடன் இத்தகைய சில எளிய உபதேசங்களை யும் மேற்கொண்டு ஒழுக முயற்சித்து வந்தால் நாளாவட்டத்தில் நற்பெயரும், பலனும் கிடைக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. இவைகளின்றித் தினந்தோறும் சற்று நேரம் ஒளியான ஓர் இடத்தில் அமர்ந்து மனத்தின் எண்ண வேகத்தைக் கட்டுப்படுத்தி இறைவனைப் பற்றிய சிந்தனையில் இருக்சப் பழகி வந்தால் மனம் லயமடைந்து சலனம் குறைந்து, மெதுவாக நம் வசத்துக்கு உற்பட்டு வரும். இத னுல் ஏற்படும் நன்மைகளை சொல்லவும் வேண்டுமோ?

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்ம பிராப்தி மந்திரப்பொருள்

பிரபஞ்சம் முழுவதும் பரவி, அனைத்தையும் ஆக்கி, அமைத்து, அழித்துக் கொண்டிருக்கும் அறிவாற்றலே வேத, வேதாந்த, ஆன்மீக மொழியில் பிரம்மம் என்று சொல்லப்படும். அந்த பிரம்ம சக்தியை செயல்படுத்தும் மந்திரங்களைத்தான் பிரம்ம பிராப்தி என்ற தலைப்பில் தமிழில் தருகிறேம். இந்த 20 மந்திரங்களையும் பராயணம் செய்யும் போது செய்பவனின் உடலில். அவனைச் சுற்றியுள்ள ஆகாய மண்டலத்தில் பிரம்ம சக்தியை செயல்படுத்துகிறது. பிரம்மமே உமக்கு அருளும் போது நீங்கள் பெறக்கூடாததும், பெறவேண்டியதும் ஒன்றுண்டோ, இவ்வுலகில் நீங்கள் இன்பமாய் வாழ என்னென்ன தேவையோ அவையெல்லாம் உமக்கு உண்டாகும். அத்துடன் இன்னும் எத்தனையோ பிறவிகளுக்கப்பால் நீங்கள் பெறவேண்டிய ஞானப் பேற்றை இப்போதே பெறச் செய்யும். பராயணம் செய்யும் இடத்தில் உள்ள அனைவருக்குமே இந்த நன்மை உண்டாகும்.

ஆகவே வாசகர்கள், இப்புத்தகத்தில் கூறிய ஆன்மீக, அருள் உபதேச நெறிநின்று வாழ்ந்து மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு, கீழ்வரும் 20 மந்திரங்களையும், காலை-மாலை-பக்தியோடு பராயணம் செய்வது மிகவும் நல்லது.

மந்திரம் 1

எல்லா உயிரினங்களின் உள்ளாத்மாவாக இருந்து, வேறு உதவியில்லாமல் அனைத்தையும் தன், வயப்படுத்தும், ஒரே உருவாயிருந்து பல உருவங்களை உண்டாக்கும் அந்த ஆத்மாவுக்குள் இருப்பதை (இறைவனை) எந்த அறிவாளி உள்முகப்பட்டு அறிவானே அவன் தான் நிலையான சுகத்தைப் பெறுவான், மற்றவர்கள் பெறமாட்டார்கள்.

**உள்ளாத்மா :-** ஆத்மா, ஜீவன் என்று எதைச் சொல்லுகிறேமோ அதனுள் இருக்கும் ஆத்மா: பரமாத்மாதான் ஜீவாத்மா செயல்பட சக்தியாக இருக்கிறது. களிமண், பொன் முதலியவைகளில் பல உருவங்களை உண்டாக்குவதுபோல் தன் உருவ நிலையான ஆகாயத்திலிருந்து கோடானுகோடி உருவங்களை பொருள்களை உண்டாக்கியவர். அந்த இறைவனை தன் ஆத்மாவில் தான் காண முடியும். அப்படிக் காண்பவர்தான் நிலையான இன்பத்தைப் பெறுவார்.

மந்திரம் 2

நிலையானவைகளில் நிலைக்களமாய், அறிவுடை உயிர்களில் அறிவாய், பலதில் ஒன்ருயிருந்து கொண்டு விருப்பங்களை நிறைவேற்றியபடி ஆத்மாவில் இருக்கும் (இறைவனை) எந்த அறிவாளி காண்பானே அவனுக்குத் தான் நிலையான சாந்தி கிட்டும், மற்றவர்களுக்கும் கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனாகிய பேரறிவுதான் உயிர்களின் பல அறிவு நிலைகளாய் செயல்படுகிறது. உயிர்களின் நல்ல, கெட்ட விருப்பங்களை நிறைவேற்றுவது இறைவனே.

மந்திரம் 3

இறையொளியின் முன் சூரிய ஒளி ஒளிக்காது. சந்திர நட்சத்திரங்களின் ஒளி மின்னலின் ஒளியும் ஒளிராதாகுல் அக்கினியின் ஒளி எம்மாத்திரம். இறையொளியைப் பின் தொடர்ந்தே மற்ற ஒளிகள் ஒளிர்கின்றன. ஒளிவிடும் பொருள்களெல்லாம் இறைவனிடமிருந்தே ஒளியைப் பெறுகின்றன.

இறைவன் சோதி, அந்தச் சோதியாலேயே மற்ற ஒளிப்பொருகள்களெல்லாம் ஒளிவீசுகின்றன.

மந்திரம் 4

அமிர்தம் பிரம்மமே, முன்புறம் பிரம்மா பின்புறம் பிரம்மா வடக்கு தெற்குகளில், கீழ் மேலில் பிரம்மா பரவியிருக்கிறது. இப்படி பிரம்மம் பிரபஞ்சத்தை தனதாக்கி, அனைத்திலும் மேலாயிருக்கிறது. பிரம்ம சக்தி இல்லாத இடமேயில்லை.

மந்திரம் 5

இந்தப் பிறவிலேயே இறைவா! உன்னை அறிந்தாக வேண்டும். இல்லாவிட்டால் இப்பிறவி வீணாகிவிடும். இந்த உண்மையை அறிந்து பிறவியை இறைவனை அறிய பயன்படுத்துபவன் பிறவாப் பேரின்பம் பெறுவான், மற்றவர்கள் பிறவி முழுதும் துன்பத்தையே அனுபவிப்பார்கள்.

மானிடப் பிறவி எடுத்தது இறைவனை அறிவதற்காகவே, இதைச் செய்யாதவன் பிறவி முழுவதும் துன்பத்தையே அனுபவிப்பான்

மந்திரம் 6

கை, கால் இல்லாமலிருந்தும் வேகமாய் இடம் பெயர்ந்து, எதையும் பற்றுவான், கண்கள் இல்லாமல் பார்ப்பான். காதுகளில்லாமல் கேட்பான் அறிய வேண்டியதை அறிவான், ஆனுல் அவனை யாரும் அறிய மாட்டார்கள். அவனை அனைத்துக்கும் முற்பட்ட பெரும் புருஷன் என்று சொல்வார்கள். பரு, நுண்பொறிகள் இல்லாமல் தானே பொறிகளாய் பொறிகளின் இயக்கமாயிருப்பவன் இறையவன் அவனே பெரிய, முதன்மையான புருஷன்-பிரபஞ்சத்தின் பொருள்.

மந்திரம் 7

அனுவிற்கு அணுவாய், பெரியதற்குப் பெரியதாய் இருக்கும் பரமாத்மா உயிரினங்களின் குகையில் நிலைத்திருக்கிறுன். அவனை செயலற்றவன் காண்பான். அப்போது துன்பக் கடலை தாண்டி இறையருளால் பயனுடைய வாழ்வைப் பெறுவான்.

**உயிரினங்களின் குகையில்:-** குகை இருளால் மறைபட்ட இடம். அறியாமை இருளில் மறைபட்டியிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலற்றவன்:- தான் இன்னும் அதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்ற நிலையைக் கடந்து, இனி எதுவும் செய்ய வேண்டியதில்லை என்ற தன்மையை எந்த செயலிலும் பற்றற்ற நிலையை அடைந்தவன்.

மந்திரம் 8

சூஷ்மத்திலும், குஷ்மமாய் பிரம்மாண்டத்தின் - பிரபஞ்சத்தின் நடுவில் அனைத்தையும் உண்டாக்கும் ஒரு பொருள் பலதாருக்கிறது. பிரபஞ்ச முழுதும் கப்பியிருக்கும் இறைவனை அறிந்தவன் நிகரற்ற சாந்தியையும், இன்பத்தையும் பெறுகிறான்.

நுண்ணிதிலும் நுண்ணியதாய் பிரபஞ்ச நடுவில் இருந்து பிரபஞ்சத்தை ஆக்கி அனைத்தையும் தன்னுள் அடக்கியிருக்கிறது

மந்திரம் 9

எல்லா உயிர்களிலும் மறைந்திருக்கும் இறைவன், அனைத்துக்கும் தலைவனாயிருந்து, அனைத்தையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ரிஷிகளும், தேவர்களும் அவனில் லயித்து, அவனை அறிந்து மரண பாசத்தை சிதைக்கிறார்கள்.

ரிஷிகளும், தேவர்களும் இறைவனுடன் ஒன்றியதாலேயே மரணத்தை வென்று நித்தியமாய் இருக்கிறார்கள்.

மந்திரம் 10

இந்த தேவன் அனைத்தையும் செய்பவன், பெரிய ஆத்மா எப்போதும் ஜனங்களின் இருதயத்தில் குடியிருப்பவன், இருதயப் பயனை அடையும் மனிதன் தன்மனதால் ஆராய்ந்து அதை அறிய வேண்டும். அப்படி அறிந்து கொண்டால் பிறவாப் பேரின்பம் கிடைக்கப் பெறும்.

இருதய இயக்கத்தால் தான் உடலில் மற்ற இயக்கங்கள் இயங்குகின்றன. இருதயத்தின் தன்னியத்துக்குக் காரணம் இறை சக்தி. இருதயம் இருக்கும் போதே மனதால் ஆராய்ந்து இறைவனை தெரிந்து கொள்ள வேண்டும்.

மந்திரம் - 11

அவனை யாரும் கண்களால் பார்க்க முடியாது. அவனுக்கு சமமானவர் யாருமில்லை. இருதயத்தில் இருக்கும் அதை மனதால இப்படியென அறிந்து கொண்டவன் பிறவாப் பேரின்பம் பெறுவான்.

இறைவனைக் காணவொட்டாமல் செய்யும் மனம் முற்றும் உன்முகப் பட்டால் அவனைக் காணும்.

மந்திரம் 12

அதற்கு செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. செயல் புரிவதற்கான உறுப்புகளும் இல்லை. அதற்குச் சமமானதோ, மேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதோ ஒன்றுமில்லை. அதன் மேலான சக்தியைப் பற்றி பலவிதங்க ளாகக் கூறப்படுகிறது. அது இயற்கையாக ஞானம், பலம், செயல் கொண்டது.

ஞானத்தையும், பலத்தையும், இயக்கத்திறனையும் எல்லா உயிர் களும் வேறொன்றிலிருந்து பெறவேண்டும். இறைவனுக்கு இவை இயல்பானது.

மந்திரம் 13

எல்லா உயிர்களிலும் மறைந்திருக்கும் தேவன் ஒருவனே. அவன் அனைத்திலும் பரவியுள்ளவன். எல்லா ஆன்ம கோடிகளின் அந்த ராத்மாவாக இருப்பவன். உயிர்கள் புரியும் கர்மங்களுக்குத் தகுந்த பலனை அளிப்பவன். எல்லா பூதங்களிலும் எப்போதும் வசிப்பவன். சாக்ஷியாக மட்டும் இருப்பவன். அறிவு வடிவினன். தனியானவன், குணங்களில்லாதவன்.

கர்மம் செய்ய மனிதனுக்குரிமையுண்டு. அக்கர்மத்துக்குத் தகுந்த பலனை அளிப்பவன் இறைவனே.

மந்திரம் 14

பிரபஞ்ச காரியத்துக்குக் காரணமாய் நித்தியமான உனக்கு வணக் கம்: அறிவு மயமாய் எல்லா உலகங்களுக்கும் இருப்பிடமாயிருக்கும் உனக்கு வணக்கம். இரண்டற்ற தத்துவமாய் முக்தியைக் கொடுப்ப வனுக்கு வணக்கம். எப்போதுமிருந்து, எங்கும் பரவியிருக்கும் பிரம் மனுக்கு வணக்கம்.

அத்வைத தத்துவம்

பலவாக ஆகியும் தன் இயல்பை மாறுமல் இருக்கப் பெறுபவன் கல்லாக, மரமாக, மனிதனுக ஆகியும் தன் தன்மை மாறுமல் இருக்கப் பெறுபவன்.

மந்திரம் 15

சரணடைய வேண்டியவன் நீ ஒருவனே, ஏற்கத் தகுந்தவன் நீ ஒருவனே. சுயம் சோதியாய் பிரபஞ்சத்தை ஆட்சி புரிபவன் நீயே. பிரபஞ்சத்தை ஆக்கி, அமைத்து, அழிப்பவன் நீ ஒருவனே. கலங்க மும் சஞ்சலமும் இல்லாத மேலானவன் நீ ஒருவனே.

மந்திரம் 16

பயப்படவேண்டியவைகளின் பயம், கொடுமைகளின் கொடுமை, பிராணிகளின் இயக்கம், தூய்மைகளில் தூய்மை, பதவிகளில் மிக மேலானது அனைத்தையும் நடத்துவிப்பவன் நீ ஒருவனே. மேலான வைகளில் மேலானவன் காப்பாற்றும் நன்மைகளின் காப்பு நீ.

இறைவன் பயப்பட வேண்டிய செயல்களில் பயமாகவும் கொடுமை அனுபவங்களில் கொடுமையாகவும், காப்பதில் காப்பாற்றுபவனாக வும் இருப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரம் 17

இறைவா: உன்னை நாங்கள் நினைப்போம், உன்னை நாங்கள் வழிபடுவோம். பிரபஞ்ச சாக்ஷயாயிருக்கும் உன்னை வணங்குவோம். அந்த பற்றிக்கோடொன்றுமில்லாத, சம்சார சாகரத்தைக் கடக்க கப்பலாயிருக்கும் இறைவனை அடைக்கலமடைவோம்.

சம்சாரக் கடலைக் கடக்க கப்பலாக உதவுபவன் இறைவன்.

### மந்திரம் 18

அவனுக்குத் தலைவன் யாருமில்லை, உலகில் அவனை ஆள்வது எதுவுமில்லை. அதற்கு ஒரு அடையாளமும் கிடையாது. அவயவங் களின் இயக்கத்துக்கு அவன் காரணம், அவனை உண்டாக்கியதோ, செயல் படுத்துவதோ, எதுவுமில்லை.

இயக்கங்களனைத்துக்கும் இயக்கமான இறைவனுக்கு இயக்குவ தற்கென ஒரு உறுப்பும் இல்லை.

### மந்திரம் 19

ஈஸ்வரர்களில் மேலான மகா ஈஸ்வரன், தேவர்களில் மேலான தெய்வத்தன்மை கொண்டவன், தலைவர்களுக்குத் தலைவன் மேலான இவனை முன்னிட்டு அறிவோம். புவனங்களின் ஈசனைப் புகழ்வோம்.

ஈசன் - ஆள்பவன், தலைவன்

### மந்திரம் 20

இறைவா! நீயே எமக்குத் தாய், தந்தை, உறவினன், தோழன், கலைஞன், செல்வம் மற்றும் எங்களின் அனைத்தும் நீயே.

மனிதனின் உடைமைகளனைத்தும் இறைவன் அருளே, அவனே உண்மையான அன்னை, தந்தை முதலியவர்களாக இருக்கிறான்.

இறைவனை அறிந்து இறைவனில் ஒன்றி
இறையின்பம் பெறுக!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோக்ஷலோக உதயம்

எத்தனைத்தான் சாமிகளைக் கும்பிட்டாலும், ஏற்றமிகு சொற்பொழிவு கேட்டிட்டாலும், பலகாலம் புத்தகங்கள் படித்திட்டாலும் பலகலைகள் பாங்குறவே கற்றிட்டாலும் பரிணாமம் உயரும்வரை ஞானம் தோன்றா. பரந்தாமன் மோக்ஷமது கிட்டிடாதப்பா.

தாவரங்கள் தோன்றி, வளர்ந்து, பயன்தர பரிணாம காலமுண்டு பறவைகள் விளங்குகள் தோன்றி, வாழ்ந்து மறைய பரிணாம வரையறை உண்டு. பூமிக்கும் அதைப் படைத்த பிரமனுக்கும் பரிணாம எல்லையுண்டு. மனிதன் மெஞ்ஞானம் பெற்று மோஷம் பெறப் பரிணாம சக்தியுண்டு.

மனித பரிணாமம் பல பிறவிகளைக் கொண்டது. சில பிறவிகளுக்குப் பின்புதான் அவனுக்கு ஞானம் பிறக்கும் அதன் வழி மோக்ஷம் கிடைக்கும்.

சித்தர்களிடன் சரண்புகும் மாணவர்கள் மோக்ஷம் பெற இன்னும் பல பிறவிகளையெடுக்க வேண்டியிருந்தாலும் குருமார்கள் ரகசிய வித்தை மூலம் அவர்களின் பரிணாமத்தைத் துரிதப்படுத்திவிட, மாணவர்கள் இந்தப் பிறவியிலேயே மோஷம் பெற்றுவிடுகிறார்கள்.

அத்தகைய ரகசிய சித்த சாதனையைக் கற்று, உங்கள் பரிணாமத்தைத் துரிதப்படுத்தி மிக விரைவில் மெஞ்ஞானம் பெற்று, பிறவிப் பெரும் பயனை இகத்திலும் பரத்திலும் பெற விரும்புகிறீர்களா? அப்படியானால் அதற்கான வாய்ப்பு இலங்கையில் கிடைக்கவிருக்கிறது.

தொடர்பு கொள்ளவும்:-

ஸ்ரீ காயத்ரீ சித்தர்
ஸ்ரீ காயத்ரீ பீடம்
நுவரெலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ உபாசனை

எங்கள் பீடத்தின் வாராந்திர உபாசனை வகுப்பிலும், உபந்யாச வகுப்பிலும், காயத்ரீ தத்துவம், அக்ஷரார்த்தம் சப்தார்த்தம் பாதார்த்தம்: காயத்ரீ சாதனையால் சகல கார்ய சித்திகளைப் பெறும் முறைகள்: காயத்ரி சாதனையால் இராஜ, ஹட, குண்டலினி, தப ஷட்சக்ர பேதன யோக சித்திகளைப் பெறும் முறைகள்; வஸ்ய, ஆகர்ஷண, உச்சாடன, மோகன, வித்வேஷண, மாரணம், முதலிய கிரிகைகளைச் சாதிக்கும் முறைகள்; பஞ்சமுக, சதுர்முக, த்ரிமுக ஏகமுக காயத்ரி, வைஷ்ணவீ, ப்ரஹ்மாணி, சரஸ்வதி, லக்ஷ்மீ, துர்க்கா முதலான பராசக்தியின் பல்வேறு உருவங்களின் இரகஸ்யார்த்தங்கள்: காயத்ரீ கீதை, காயத்ரீ ஸ்ம்ருதி, காயத்ரீ சம்ஹிதை, காயத்ரீ ஸ்தவம் காயத்ரீ உபநிசம், காயத்ரீ ராமாயணம், காயத்ரீ ஹ்ருதயம், காயத்ரீ லஹரி, காயத்ரி கவசம், காயத்ரி சகஸ்ரநாமம் முதலான பல்வேறு சாஸ்திரங்களின் இரகஸ்யார்த்தங்கள், இராவணன், மஹீதரர், சாயணர், யாக்ஞவல்க்யர், பாரத்வாஜர், சங்கரர், ராமானுஜர், வரதராஜர் முதலானோரின் காயத்ரீ பாஷ்யங்களுக்கு விளக்கங்கள், முதலான பல்வேறு தத்துவங்கள் விஞ்ஞான விளக்கத்துடன் உபதேசித்து வரப் படுகின்றன.

உபாசனா, உபதேச வகுப்புகளில் கலந்துகொள்ள பீடத்தின் உறுப்பினராக சேரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி பற்றிய

# அரும் பொக்கிஷ நூல்கள்

1. சூக்ஷ்ம சக்திகளுடன் தொடர்பு கொள்ள
**காயத்ரீ மூலம் குண்டலினி விழிப்பு**

2. சகல சக்திகள் அளிக்கும்
**காயத்ரீ தியானம்**

3. முழு ராமாயணப் பராயண பலனைத் தரும்
**காயத்ரீ ராமாயணம்**

4. காயத்ரி மந்திரப் பொருளைச் சுருங்க சொல்லும்
**காயத்ரீ கீதை**

5. காயத்ரி பற்றி படித்திராத கேட்டிராத இரகசியம்
**ஶ்ரீ காயத்ரீ மந்திர மகிமை**

6. **தியானம்**

கிடைக்குமிடம்:-

**ஶ்ரீ காயத்ரீ பீடம்**
82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்,
நுவரெலியா.

அச்சுப்பதிப்பு:
சாந்தி அச்சகம், 14/c, பேர்ளுந்து அவனியு, நீர்கொழும்பு.
தொலைபேசி: 031 - 2143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org